# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,856 — 1969 මැයි 30 වැනි සිකුරාදා — 1969.5.30**

14,856 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

**[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 571 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 607 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 590 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 597 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 604 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 607 |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

---

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. A. 29/X. 2089/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### கனிட்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளின் உப-அதிபர் பதவி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரிகளில் உப-அதிபர் பதவிக்கு பெண் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் தயாரிக்கப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக எனக்கு அனுப்பப்படுதல் வேண்டும் :—

(i) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1969.6.13 ;
(ii) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.6.20.

**குறிப்புகள்.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடிதஉறையை, தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

(iii) வெளி நாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாட்டுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம் ;

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவு.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப் பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **சம்பளமும் சகாயப் படிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(i) ரூபா 8,880—9 × 480—13,200 வருடாந்தம். (ரூபா 11,760 பெற முன் வினைத்திறமைகாண் தடை உண்டு ; ரூபா 11,280 இல் இரு வருடங்கள் தங்கல்) ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இத்தீவிலுள்ள கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரி எதிலேனும் கடமை புரிய வேண்டும். தற்போது காலியிடம் பொல்கொல்லை கனிஷ்ட பல்கலைக் கழகக் கல்லூரியில் உண்டு.

3. **நியமன நியதிகள்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். எனினும், தெரிவு செய்யப்படுபவர் சகாய நிதி அடிப்படையில் முதலில நியமிக்கப்படுவர். அவர் பத்து ஆண்டுச் சேவை முடிவு முன்னர் உபகாரச் சம்பள சேவையில் சேருவதற்குத் தம் விருப்புரிமையை உபயோகிக்க உரிமையுடையவராவர். இவ்விருப்புரிமையை ஒருமுறை பிரயோகித்ததால் அதை மீட்க முடியாது ;

(ii) நியமனம் முதலில் 3 வருட காலத்துக்கு சோதனை நிலையில் அமையும். ஏற்கனவே அரசினர் சேவையில் நிரந்தரமான உபகாரச் சம்பள உரித்துடைய ஒரு பதவியை வகிக்கும் ஓர் பெண் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர் ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவர்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ந் திகதியன்று 28 வயதுக்குக் குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசினர் சேவையில் ஏற்கனவே நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது) ;

(ஆ) மேற்றர அதிபராக இருக்க வேண்டும்

அல்லது

பின்வரும் தகைமைகள் பெற்றிருக்க வேண்டும் :—

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டமும் (1 ம் அல்லது 2 ம் வகுப்பு/பிரிவு பெற்றிருப்பின் முதன்மை அளிக்கப்படும்) பட்டம் பெற்றபின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் அல்லது உயர் தொழில் நிலையத்தின் உயர்தர பட்டமும் அல்லது சமனுன உயர்தொழில்தகைமைகளும்,

(ii) ஒரு பல்கலைக் கழகத்தில் 5 வருடத்துக்குக் குறையாத படிப்பித்தல் அனுபவமும் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் ஆசிரியர் கலாசாலைகளிலும் உயர்தர கல்வி மட்டத்திலும் அல்லது இவை எவற்றிலேனும் 10 வருடத்துக்குக் குறையாத படிப்பித்தல் அனுபவமும்

அல்லது

பட்டம் பெற்றபின் அரசினர் சேவையில் ஒரு மேற்றர நியமனத்தின் நிருவாக பதவி ஒன்றில் அல்லது ஒரு பல்கலைக்கழகத்தில் I ந் தர விரிவுரையாளராக 5 வருடத்துக்குக் குறையாத சேவையும்.

(இ) கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிங்கள அறிவு பெற்றிருக்க வேண்டும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படும் எவரையும் விதிக்கப்படும் ஒரு மட்டத்தில் தான் குறித்துரைக்கும் ஒரு காலத்துக்குள் சிங்களத்தில் மேலும் தேர்ச்சி பெறுமாறு மகா வித்தியாதிபதி வேண்டலாம்,

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம் ;

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 21 ந் உ.

5–1166/1—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856.

---

இல. AB 101/X 2090/68.

## கமத்தொழில் சேவை இலாகா

### சிரேஷ்ட உதவி ஆணையாளர் பதவி—பயிர்காப்புறுதி

கமத்தொழில் சேவை இலாகாவில் உள்ள சிரேஷ்ட உதவி ஆணையாளர் (பயிர்காப்புறுதி) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள திகதிகளில் அல்லது அதற்கு முன், அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற விலாசத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1969.6.13

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1969.6.20.

குறிப்பு .—

1. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

2. விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித்திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்கு தாமே பொறுப்பாவர்.

3. வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ் அபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்ட உள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

4. **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நடமுடையவர்களாக இருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இந்தப் பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். (அரசாங்க சேவை மாற்றுதவிச் சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்தல் வேண்டும்).

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு:—ஆண்டுக்கு ரூபா 8,880—9 × 480ம் 2 × 600—ரூ. 14,400.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும், உடல் நலம் உடையவராயும் இருத்தல் வேண்டும்

(ஆ) 1969.6.13. ந் திகதியில் 28 வயதுக்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்க்கு வயதின்மேல் எல்லைக்கட்டுப்பாடு அமையாது).

(இ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். பொருளாதாரத்தை ஒரு பாடமாக எடுத்து சர்வகலாசாலைப் பட்டம் பெற்று இருப்பவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தில் 5 வருட நிறைவேற்றல் பதவி அனுபவம் அல்லது அரசாங்க கூட்டு ஸ்தாபனங்களில் அல்லது அரசாங்க பகுதிகளில், பதவி உத்தியோகத்தராக 5 வருட அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும். பயிர்க் காப்புறுதி அல்லது பொதுக்காப்புறுதி வேலைகளில் தொழில் அனுபவமும் அறிவும் இருப்பதுடன் கிராமஸ்தாபனங்களிலும் சேவைகளிலும் ஈடுபாடு இருக்கும் விண்ணப்பகாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. அபேட்சகர்கள் கீழ்க்காணும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**— சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது)

(ஆ) பல்கலைக்கழகப்பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு, இவற்றில் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியர் இடமிருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழில் தகைமையும் தொழில்நுட்பத் தகைமையும் உயர் தொழில தகைமை அல்லது தொழிநுட்ப தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**— (i) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத்தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் அவருடைய பெயருக்கு அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றிஅறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பம் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரியா
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 21 ந் வ.

5-1166/2—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

இல. AB. 99/X 2091/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### வர்த்தக சிரேஷ்ட போதனாசிரியர் பதவி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள வர்த்தக சிரேஷ்ட போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—1969.6.13

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1969.6.20

**குறிப்புகள்.**— (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்:**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூ. 4,800—180 × 3—240 × 6—6,780 வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூ. 5,580 க்கு முன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 13 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் வர்த்தக அல்லது பொருளாதார பட்டம் பெற்றிருப்பதுடன் 5 வருட செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு வகைப் பட்ட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஈ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் வர்த்தக தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் 5 வருட செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு வகைப் பட்ட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) சிங்களத்தில் கற்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்கள தேர்ச்சியைப் பெற வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (**மு. கு.**— ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு**— (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திரப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப் படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 21 ம் உ.

5–1166/3—30.5.69 ம் திகதிய வர்த்தமானி இல. 14,856.

---

**No. AB36 /X./2092/69**

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம்

### பொது முகாமையாளர் பதவி—மின்தறித்திட்டம்

கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களத்திலுள்ள மின்தறித் திட்ட பொது முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—13.6.1969.
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—20.6.1969.

குறிப்பு.—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும், இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் நிபந்தனைகளும்.**—இந்தப் பதவி ஓய்வு காலச் சம்பளத்துடன் கூடிய நிரந்தரமானதாகும்.

3. **சம்பளமும் படிகளும்.** —இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—ஆண்டொன்றுக்கு ரூபா 4,800 விருந்து உயர்வு ரூபா 8,400 வரையில். ஆண்டு உயர்வு 12 முறையிலான ரூபா 360. திறமைத் தடைப் பரீட்சை ரூபா 6,660.

4. **தேவையான தகைமைகள்.** —ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 13.6.1969 அன்று, 40 வயதிற்குக் கூடாதவராகவும் 21 வயதிற்குக் குறையாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விஞ்ஞானத்துடன் பொருளாதாரம், வர்த்தகம் ஆகிய ஒன்றில், பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களத்தில் கடமை புரியும் ஊழியர்கள், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்புப் பத்திரம் பெற்றிருப்பின், வயதெல்லை ஓர் தடையாக இருக்காது.

**குறிப்பு.**—நெசவுத் தொழிலில் அனுபவம் இருப்பின் அது மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ((ஆ) எனக் குறிப்பிட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவங்களுடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது). அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 21 ந் உ.

5—1166/4—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856.

---

No. AA 49/X. 2093/69

## உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதி

### பொறியியலாளர் பதவி (மின்சாரம்)

உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் மின்சாரப் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு செயலாளர், அரசாங்கசேவை ஆணைக்குழு, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 13.6.69.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 20.6.69.

குறிப்பு :

(1) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்வோர், 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரை இடப்பட்டாததுமான ஓர் கடித உறையில் தமது சொந்த முகவரியை எழுதிக் கடிதத்துடன் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் அபேட்சகர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய வடிவம் தொடர்பான கடிதம் அஞ்சலிற் தவறிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்புடையவராவார்.

(3) வெளிநாட்டில் உள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படி வங்களை பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அபேட்சகர்கள் விரும்பி ஞல் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பி வைக்கலாம்.

(4) **மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங் கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அலுவலாளர்கள், சேவைக்குத் தகுதி யான உடல்நலம் உடையவர்களா என்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக் குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட அலுவலாளரே கொடுத்தல் வேண் டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(அ) பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளம் உடையதுமாகும். விதவையர், அனுதையர் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்தல் வேண்டும் ;

(ஆ) நியமனம் 3 வருடகாலத் தகுதிகாண் நிலையுடையது ;

(இ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்க உத்தியோகத்தராக இருந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவருடைய நியமனம் பதிற்தகைமை உடையதாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரச் செயலாளரினல் நிர்ண யிக்கப்படும் தொகையாகிய பிணைப்பணத்தை, தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் காட்டுமாறு கோரப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

(அ) ஆண்டொன்றுக்கு ரூபா 5,160 முதல் ரூபா 6,240 வரை ரூபா 360 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 3 உம், ரூபா 6,240 முதல் ரூபா 13,200 வரை ரூபா 360 கொண்ட வருடச் சம்பள உயர்வுகள் 4 உம், ரூபா 480 கொண்ட வருடச்சம்பள உயர்வுகள் 10 உம், ரூபா 11,280 இல் ஈராண்டுத் தரிப்பும், ரூபா 6,960 க்கு முன்னும் ரூபா 11,280 க்கு முன்னும் வினைத் திறமைகாண் தடையும் கணிக்கப்படும்.

லண்டன் மின்சாரப் பொறியியலாளர் நிறுவனத்தின் கூட்டு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும்பொழுது அவர் ஆண்டு ரூபா 7,320 என்ற சம்பள நிலையிற் கணிக்கப்படுவர்.

(ஆ) தெரிவுசெய்யப்பட் அபேட்சகர் லண்டன் மின்சாரப் பொறியிய லாளர் நிறுவகத்தின் கூட்டு உறுப்பினராக இருந்தால், அவர் ஆண்டு ரூபா 7,320 என்ற சம்பள நிலையிற் கணிக்கப்படுவர்.

(இ) (1) தெரிவு செய்யப்பட்ட பொறியியலாளர் (மின்சாரம்) முழு உயர்தொழிற் தகைமை இல்லாமல் (ஏ. எம். ஐ. ஈ. ஈ.) ஆண்டு ரூபா 10,800 க்கு மேல் கணிக்கப்படுவதற்குத் தகுதி யற்றவராவர்.

(2) ஆண்டு ரூபா 6,960 என்ற சம்பள விகிதத்திற்கு முன் வினைத்திறமைகாண் தடையைக் கடப்பதற்கு, அவர் திணைக்கள நடைமுறை, கணக்கு முதலியவற்றில் விதித்த பரீட்சையில் சித்தி எய்தல் வேண்டும்.

**குறிப்பு.**—முழு உயர்தொழிற் தகைமையுடன் சேவையிற் சேரும் பொறியியலாளர்கள் நியமன நாளிலிருந்து இருவருட காலத்திற்குள் இப்பரீட்சையில் சித்தி எய்தல் வேண்டும்.

4. **வேண்டிய தகைமைகள்.**— ஒவ்வொரு அபேட்சகரும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று அவர்,

(அ) சிறந்த நற்குணம் உடையவராகவும், உடல்நலம் உடையவராகவும் ;

(ஆ) 13.6.69 ம் திகதியில் 21 வயதிற்குக் குறையாதவராகவும் 40 வய திற்கு மேற்படாதராகவும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது) ;

(இ) (1) (லண்டன்) மின்சாரப் பொறியியல் நிறுவகத்தின் கூட்டு உறுப்பினரில் ஒருவராகவும் ; அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் (பொறியியலில்) விஞ்ஞானப் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அடைந்தவராகவும் ; அல்லது

(3) லண்டன் மின்சாரப் பொறியியலாளர் நிறுவகக் கூட்டு உறுப் புரிமைப் பரீட்சை பிரிவு 1 ல் உம், 2 ல் உம் அல்லது அதனின் றும் விதிவிலக்கழிக்கக் கூடிய பரீட்சையில் சித்தி அடைந்தவ ராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**—1961 ஆம் ஆண்டு கட்டாய அரசாங்க சேவை அதிகாரச் சட்ட இலக்கம் 70 இன் கீழ் பொறியியலாளர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பொறியியலாளர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்க ளாவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப் பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு** :—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக் குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றி தழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக் கழகப் பட்டம் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புச்சான்றிதழ் இரண்டு, இவற்றில் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாகவும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமையும் தொழில்நுட்பத் தகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமைபற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி அடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு** : (1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் பிரதிகளை யாயினும் விண்ணப்பப் படிவத்துடன் **இணைக்கக்கூடாது.**

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண் ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையில் உள்ள அலுவலாளர்கள் தங்கள் விண்ணப் பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அவர்கள் அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச் சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரி யிட்டனுப்ப வேண்டுமே அன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவ லாளருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலாம் பாகம், இரண்டாம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட் டையை ("அ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பிரகாரம் அறி வுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் திருப்பி அனுப்புதல் வேண் டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தே வைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்ப கடைசித் திகதியில் இருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவைக் குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகம்,
அ. பெ. இல. 500,
காணிமுகச் செயலகம்,
கொழும்பு,
21.5.1969.

5–1166/5—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

இல. AA 47/X 2094/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : இலத்திரனியல் விரிவுரையாளர், II ந் தரம்**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள ஹார்டி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் இலத்திரனியல் விரிவுரையாளர், II ந் தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்: 1969.6.13.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்: 1969.6.20.

**குறிப்புகள் :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற்கு தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியமதாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 4,080—360—ரூ. 8,400 வருடாந்தம்.

**குறிப்பு :**

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்டதாரிகள் அல்லது இலத்திரனியலில் விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதி போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகள் பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 பெறுதற்கு உரித்துடையராவர்.

(ii) ஓர் ஆசிரியர் கலாசாலை அல்லது ஒரு சிரேட்ட தொழில்நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது சமனான அல்லது உயர்ந்த தரத்தய அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளும் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 வழங்கப்படுவதற்குச் சீர்தூக்கப்படுவார்கள்.

(iii) மின்சார எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத் தகைமை போன்ற பூரண உயர்தொழில் தகைமை பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 7,320 பெறுவதற்கு உரித்துடையவராவர்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்து எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ந் தர விரிவுரையாளர்கள், அவர்களுடைய சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப்படியை—அதாவது வருடாந்தச் சம்பளம் ரூ. 8,400 ஐ அடைந்து அச்சம்பளப் படியில் ஒரு வருடம் கடமை புரிந்தபின், வருடாந்தம் ரூ. 480 சம்பள உயர்ச்சிப் பணமாகப் பெற்று வருடாந்தம் ரூ. 10,800 வரும்வரை சம்பளம் பெறலாம்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர்கள் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது).

(இ) (i) இலத்திரனியல், தொலைசெய்திப் போக்குவரத்துப் பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்து மின்சார எந்திரவியல் விஞ்ஞான முதுமாணிப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) மின்சார எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத் தகைமைப் பரீட்சையின் I, II, III ஆம் பகுதிகளில் சித்தியடைந்திருப்பதுடன் 3 வருட செயல்முறை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(iii) இலத்திரனியல், தொலைசெய்திப் போக்குவரத்துப் பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட எந்திரவியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது போராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைண்மகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு :**

(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ “ எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

உ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்கசேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 21 ந உ.

5–1166/6—30.5.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,856

---

அ.க.பீ. 48/எக்ஸ். 2095/69.

## சௌக்கியத் திணைக்களம்

### எக்ஸ்–கதிர், மின்வைத்திய நுண்கலைஞர் பதவி

சௌக்கியத் திணைக்களத்தில் எக்ஸ்–கதிர், மின்வைத்திய நுண்கலைஞர் (எக்ஸ்றே அன்ட் லெக்ரோ–மெடிக்கல் ரெக்னொலோஜிஸ்ற்) பதவியொன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்களை நிரப்பி அவற்றைப் பின்வரும் திகதிகளன்று அல்லது அவற்றுக்குமுன் எனக்கு வந்து சேரும்படி அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்: **13.6.1969**

(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள்: **20.6.1969**

**குறிப்பு** :— (i) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தைத் தபால்மூலம் அனுப்பும்படி கடிதம் எழுதிக் கேட்குமிடத்து, சொந்த விலாசமிடப்பட்டதும், 9″ × 4″ அங்குல அளவுக்குக் குறையாத அளவானதும் முத்திரை ஒட்டப் பெறுததுமான (என்வலப்) கடித உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். அத்துடன் அங்ஙனம் எழுதிக் கேட்கும் அபேட்சகர் தனது கடிதத்தில் தான் அரசாங்க சேவையில் உள்ள ஒரு உத்தியோகத்தரா, இல்லையா என்பதையும் மிகத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

(ii) ஒரு விண்ணப்பப் பத்திரம் அல்லது அத்தகைய பத்திரம் சம்பந்தமான ஒரு கடிதம் தபாலில் இழக்கப்பட்டது அல்லது தாமதமானது என்ற குற்றச்சாட்டு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தங்கள் விண்ணப்பங்களைக் கடைசி நாட்கள் வரை தாமதஞ் செய்யும் அபேட்சகர்கள் அதன் விளைவுகளுக்குத் தாமே பொறுப்பேற்கவேண்டும்.

(iii) கடல்கடந்த நாடுகளில் உள்ள அபேட்சகர்கள் இதற்கான அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்களை வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகளது அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் விரும்பினால், தமது விண்ணப்பப் பத்திரத்தை இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபைச் (பப்ளிக் சேர்வீஸ் கொமிஷன்) செயலாளருக்குக் கிடைக்கச் செய்யும்படி தாம் வசிக்கும் நாட்டுக்கு அல்லது அதற்கு அண்மையில் உள்ள ஒரு நாட்டுக்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் வெளிநாட்டுப் பிரதிநிதி அலுவலகத்துக்குக் குறிப்பிட்ட காலத்துக்குள் அதனை அனுப்பிவைக்கலாம்.

(iv) **வைத்தியப் பரிசோதனையும், பயணச் செலவுகளும்.**— இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமிக்கப்படுவதற்கு வெளிநாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர்கள் உடற்தகுதியைப் பொறுத்தமட்டில் சேவைக்குத் தகுந்தவர்களா என்பதை ஆய்ந்தறியும் நோக்கத்தை முன்னிட்டு அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியத்தொழில் செய்வோரிடம் பரிசோதனை செய்விக்கச் செல்லுமாறு கேட்கப்படுவர். அத்தகைய பரிசோதனைக்கான கட்டணமும், அவர்கள் இலங்கைக்கு வருவதற்கான பயணச் செலவுத்தொகைகளும் அந்த உத்தியோகத்தர்களாலேயே செலுத்தப்படவேண்டும்.

**2. தொழில் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்**

பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றிச் சம்பளம் பெறும் தகுதி உள்ளதுமாகும். நியமனம் மூன்று வருடகாலத்துக்குத் தகுதிகாண் நிலையில் இருக்கும்.

**3. சம்பளமும், படிகளும்**

இந்தப் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—

முதல்வருட ஆரம்பச் சம்பளம் ரூபா **4,440.** இதில் வருடாந்தம் **360** ரூபா வீதம் **11** வருடாந்த ஏற்றங்களின் பின் இறுதிவருட உச்சச் சம்பளம் ரூபா. **8,400/-**

**4. தகைமைகள் :**

ஒவ்வொரு ஆண்/பெண் அபேட்சகரும், தான் —

(அ) நற்குணமும், நல்ல தேகாரோக்கியமும் உடையவரென்றும்;

(ஆ) **13.6.1969** ஆந் திகதியன்று **21** வயதுக்குக் குறையாதவரென்றும் **35** வயதுக்கு மேற்படாதவரென்றும் ;

(ஏற்கெனவே அரசாங்கசேவையில் உள்ளவர்களான அபேட்சகர்களுக்கு மேல்வயதெல்லை நிபந்தனை இல்லை)

(இ) (i). அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் (பௌதிகவியலை ஒரு பாடமாகக்கொண்ட) பொறியியல் அல்லது விஞ்ஞானப் பட்டதாரி அல்லது,

(ii). (லண்டன்) மின்சாரப் பொறியியலாளர்கள் தாபனக் கூட்டு உறுப்புரிமைப் பரீட்சையில் I ஆம், II ஆம், III ஆம் பாகங்களில் சித்தியெய்தியவர் அல்லது அதிலிருந்து அவருக்கு விதிவிலக்களிக்கும் பரீட்சையொன்றில் சித்தியெய்தியவர் என்றும்,

திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

**குறிப்பு.** —வேண்டிய மிகக் குறைந்த கல்வித் தகைமையான சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தை அல்லது அதற்குச் சமமான தராதரப்பத்திரத்தை பௌதிகவியல், கணிதம் (மதமற்றிக்ஸ்) எனும் பாடங்களிற் சித்தியுடன் பெற்றுள்ளவர்களாகவும், எக்ஸ்–கதிர் நுண்கலையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்றகைமைத் தேர்ச்சி அல்லது அங்கீகரிக்கப்பட்ட தாபனத்தின் கதிரிய வைத்தியத் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றவர்களாகவும் எக்ஸ்–கதிர், மின்வைத்திய உபகரணங்களின் உபயோகம், பராமரிப்பு, பழுதுபார்த்தல், பேணுதல் என்பவற்றில் குறைந்தது **15** வருட அனுபவம் உள்ளவர்களாக இருப்பவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

5. பரீட்சார்த்திகள் பின்வரும் சாதனங்களில் ஏதாவதொன்றை அல்லது முழுவதையும் கேட்கப்படும் நேரத்தில் அனுப்புமாறு கோரப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**கவனிக்க.**— ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டம் அல்லது உயர்கல்விச் சான்றிதழ்.

(இ) இரண்டு நற்குணச் சான்றிதழ்கள். இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர் கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது அவை இரண்டும்.

(உ) சிங்களத்தில் சித்தியெய்திய உயர்பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.** —(i) விண்ணப்பத்துடன் சாதனங்களோ, சாதனங்களின் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

(ii) சாதனங்களைக் கேட்கும்போது சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களது விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்கசேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் வேலை செய்யும் அரசாங்கத்திணைக்களங்களின் தலைமை அதிகாரிகளுக்கூடாக அனுப்பப்பட வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பிய திகதியை அரசாங்கசேவை அதிகாரசபைச் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பங்களை ஏற்பதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் அரசாங்கசேவைச் செயலாளருக்குச் சேரக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் ("பி" அடையாளமிட்டு) விண்ணப்பகாரர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட தபாலட்டை இந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படலாம்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளும் அரசாங்கசேவை அதிகாரசபைச் செயலாளருக்கு விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இந்தப்பகுதியில் உள்ள எந்த உத்தியோகத்தரதும் சொந்தப் பெயர் விலாசத்துக்கு அனுப்பப்படக்கூடாது.

8. இந்த வர்த்தமானப் பத்திரிகையின் (கசெற்றின்) பகுதி I, தொகுதி II இன் ஆரம்பத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்கசேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் ("எ" அடையாளமிட்ட) அச்சிட்ட தபாலட்டையை அதில் கேட்டிருப்பதற்கிணங்க நிரப்பி அனுப்பு மாறு அபேட்சகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அங்ஙனம் அனுப் பப்படுமிடத்து அவர்களது விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தில் கிடைத் ததைப்பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றாத அபேட்சகர்களுக்கு அவர்களின் விண்ணப்பங்கள் கிடைத்த மைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றி யிருந்தும், விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித்தினத்திலிருந்து மூன்று வாரங்களுள் அவை கிடைத்ததைப்பற்றிய அறிவித்தலைப் பெற்றுக் கொள்ளாத அபேட்சகர்கள் அவ்வறிவித்தல் கிடைக்கவில்லையென்பதை அரசாங்கசேவை அதிகாரசபைச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இந்த முன்னேற்பாட்டை நிறைவேற்றத்தவறும் விண்ணப் பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

மட. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்கசேவை அதிகாரசபை.

அரசாங்கசேவை அதிகாரசபை அலுவலகம்,
தபாற்பெட்டி 500,
காலிமுகச் செயலகம் (கால்பேஸ் செக்கிரட்டேரியட்),
கொழும்பு 1,21.5.1969.

5–1166/7—30.5.69ந் திகதிய வர்த்தமானி இல. 14,856.

---

இல. AA. 46/X 2096/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : பொறிமுறை எந்திரவியல் விரிவுரையாளர், II ந் தரம்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள "ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலையத்திலுள்ள பொறிமுறை எந்திரவியல் விரிவுரை யாளர் பதவிக்கு" விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படு தல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.6.13

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.6.20

குறிப்புகள்.— (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாத தும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ள வரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பு வதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப் பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங் கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ள லாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்ட வுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாள ருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**— இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோ கத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடைய வர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்து வதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல் லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் கைம்பெண் அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு கட்டணம் செலுத்த வேண்டும். நியம தாரி முதற்கண் 3 வருட காலத்திற்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப் படுவர்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்**—

இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 4,080—360—ரூ. 8,400 வருடாந்தம்.

குறிப்பு.—(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழக எந்திரவியல் பட்ட தாரிகள் அல்லது விஞ்ஞான முதுமாணி அல்லது கலாநிதி போன்ற அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் தகைமைகள் பெற் றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 5,160 பெறுதற்கு உரித்துடையவராவர்.

(ii) ஓர் ஆசிரியர் கலாசாலை அல்லது ஒரு சிரேட்ட தொழில் நுட்ப நிலையம் அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது சமமான அல்லது உயர்ந்த தரத்தய அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ள பட்டதாரிகளும் ஆரம்பச் சம்பள மாக வருடாந்தம் ரூ. 5,160/- வழங்கப்படுதற்குச் சீர் தூக்கப்படுவார்கள்.

(iii) லண்டன் குடிசார் எந்திரவியல் அல்லது மின்சார எந்திர வியல் அல்லது பொறிமுறை எந்திரவியல் கூட்டுறுப்பினர் நிறுவனத்தகைமை போன்ற பூரண உயர் தொழில் தகைமை பெற்றுள்ளவர்கள் ஆரம்பச் சம்பளமாக வருடாந்தம் ரூ. 7,320/- பெறுதற்கு உரித்துடையவராவர். அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்து எந்திரவியல் பட்டதாரிகளாகவுள்ள II ந் தர விரிவுரையாளர்கள், அவர்களுடைய சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப்படியை அதாவது வருடாந்தச் சம்பளம் ரூ. 8,400 ஐ அடைந்து அச்சம்பளப் படியில் ஒரு வருடம் கடமை புரிந்த பின், வருடாந்தம் ரூ. 480 சம்பள உயர்ச்சிப் பணமாகப் பெற்று வருடாந்தம் ரூ. 10,800/- வரும்வரை சம்பளம் பெறலாம்.

4. **தேவைப்படும் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வதாக திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 69.6.13 அன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மே லெல்லை அமையாது)

(இ) (i) பொறியியல் எந்திரவியல் பாடங்களுடன், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் விஞ்ஞான எந்திர வியல் முதுமாணி பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) பொறிமுறை எந்திரவியல் அல்லது கூட்டுறுப்பினர் நிறு வனத்தின் I ம், II ம் பரீட்சைகளில் பகுதிகளில் தேறி யிருக்க வேண்டும்.

அல்லது

(iii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள் பெற்றிருக்க வேண் டும்.

(ஈ) சிங்களத்தில் கற்பித்தற்கான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங் களத் தேர்ச்சி பெறவேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங் களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்:

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித்தரா தரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பா ளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு: (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969.5.21

5–1166/8—30.5.69 நிதிகதிய வர்த்தமானி இல. 14,856

---

இல. A126/X2097/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : மேற்றர அதிபர்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மகா வித்தியாலயங்களிலுள்ள மேற்றர பதவிகளுக்கு I ஆந் தர அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 13.6.1969.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 20.6.1969.

**குறிப்புகள் :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் 15 ஆம் கூட்டில் கேட்கப்பட்டுள்ள விபரங்களைத் தவிர பின்வருவனவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும் :—

(அ) I ஆந் தர அதிபர் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப்படியை அடைந்த திகதி.

(ஆ) விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்றுள்ளபடி, I ஆந் தர அதிபர்களுக்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் உச்சிப் படியில் புரிந்த சேவைக்காலம்—வருடங்களில்.

(iv) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந் நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(v) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**— இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச்சோதனைக் காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 30 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும்.

3. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையனவையுமாகும். மேற்குறித்த பதவிக்கு நியமிக்கப்படுதற்குமுன் உபகாரச் சம்பள பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய ஆசிரியர் பதவி ஒன்றினை வகித்த ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அவர் இப்பதவியை வகிக்கும்வரை உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையதாக இப்பதவி பிரகடனஞ் செய்யப்படும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர்கள் புதிய பதவியில் ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை புரிய வேண்டும். பதவியில் உறுதிப்படுத்தப்பட்டதும் அத்தரத்துக்கு பதவி உயர்ச்சி அளிக்கப்படும் திகதியன்று, நிதிப் பிரமாணங்களுக்கமைய, உரிய சம்பள விகிதத்தில் அவர்கள் வைக்கப்படுவார்கள்.

(iii) தெரிவு செய்யப்படுபவர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை, குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தற் பொருட்டு ஏன்கனவே ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் இனிமேல் ஆக்கப்படக் கூடியனவான விதிகளுக்கும் அமைய ஒழுக வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

4. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூபா 9,840—7 × 480—ரூபா 13,200 வருடாந்தம்.

5. **தகைமைகள் :**

(i) விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரிகள் 30 வயதுக்குக் குறையாதவராய் இருக்க வேண்டும் (13.6.1969).

(ii) விண்ணப்பதாரி ரூபா 5,520—8X360—2X480—ரூபா 9,360 என்ற ஆக்கக்கூடிய வருடாந்தச் சம்பளப்படியில் ஒரு வருடத்துக்குக் குறையாத சேவை புரிந்திருக்க வேண்டும்.

(iii) விண்ணப்பதாரிகள் உடல் நலமும் சிறந்த நல்லொழுக்கமும் உடையவராய் இருக்கவேண்டும்.

**குறிப்பு.**—விண்ணப்பதாரிகள் சிறந்த சிங்கள/தமிழ் அறிவு பெற்றிருக்க வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் ஏற்கனவே சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிராவிடின் நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் க. பொ. த. (சாதாரணதர) ப. பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியிலும்

இலக்கியத்திலும் சித்தியெய்த வேண்டும். சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்துதற்கு 3 வருடங்களுக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சி பிற்போட்ட காலமாகக் கருதப்படும்.

6. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதானங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

10. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 21 ந் உ.

5–1166/9—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தச்சுவேலை, மூட்டுவேலை போதனாசிரியர் பதவி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் தச்சுவேலை, மூட்டுவேலை போதனாசிரியர் பதவிக்கு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் " தச்சுவேலை, மூட்டுவேலை போதனாசிரியர் பதவி " எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஒருவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின், அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்திற்கு பதில் நியமனமாக அமையும்.

3. விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அல்லது

(ஆ) க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில், இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

அல்லது

(இ) சமனான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(v) லண்டன் சிற்றி அன்ட் கில்ஸ் நிலையத்தால் தச்சுவேலையிலும் மூட்டுவேலையிலும் வழங்கப்படும் பூரண தொழில்நுட்பவியல் தராதரப் பத்திரம்.

அல்லது

(iv) லண்டன் சிற்றி அன்ட் கில்ஸ் நிலையத்தால் தச்சுவேலையிலும் மூட்டுவேலையிலும் வழங்கப்படும் உயர்தர பணித் தராதரப் பத்திரம்.

அல்லது

(vi) செயல்முறைத் தொழில்நுட்பவியல் நிலையத்தால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பொறிமுறை, மின்சார எந்திரவியல்) தராதரப் பத்திரம். அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்ப நிலையத்தால் வழங்கப்படும் பொறிமுறை எந்திரவியல் தராதரப் பத்திரம்.

அல்லது

(vii) செயல்முறை தொழில்நுட்பவியல் நிலையத்தால் பொறிமுறை எந்திரவியலில் வழங்கப்படும் (மாலைநேர) தராதரப் பத்திரம்.

அல்லது

(viii) சமமான அல்லது உயர்ந்த தகைமைகள்.

(ix) சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக்கூடியவராய் இருக்க வேண்டும். அல்லது சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக் கூடிய தேர்ச்சியை நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் பெறவேண்டும்.

4. இப்பதவிக்குரிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின் வருமாறு :—

ரூ. 3,420—120 × 4—180 × 8—ரூ. 5,340, வருடாந்தச் சம்பளங்கள் ரூ. 4,080, ரூ. 4,800 ஆகியவற்றிற்கு மேட்பட்ட சம்பளங்கள் பெறுமுன் நியமதாரிகள் வினைத்திறமைகாண் பரீட்சைகளில் தேறவேண்டும்.

**குறிப்பு**—நியமிக்கப்படுதற்குத் தெரிவு செய்யப்படுவோர் போதிய செயல் முறை அனுபவமும் படிப்பித்தல் அனுபவமும் அல்லது இவ்விரண்டினுள் எதையேனும் பெற்றிருக்க வேண்டும். எனினும், 5 வருடங்களுக்குக் குறைந்த கால அனுபவம் பெற்றுள்ள ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, வேண்டிய அனுபவத்தைப் பெறும்வரை அவருடைய நியமனம் பதில் நியமனமாக அமைவதுடன் வருடாந்தம் ரூ. 3,420 என்ற மாறாத சம்பளத்துடன் நியமிக்கப்படுவார்.

**5.** அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும், விண்ணப்பத்தின் ஒரு பிரதியை இவ்வமைச்சுக்கு நேரே அனுப்பி வைக்க வேண்டும்.

**6.** விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மூ. கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும்.

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள்.

**முக்கிய குறிப்பு**—அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் மேற்போந்த (இ) ம் உபபந்தியில் குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.

**7.** விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

**8.** அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

**9.** சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப் படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எனதெண் : பொ. நி/3/210,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு மே மாதம் 22 ந் திகதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தச்சுவேலை, மூட்டுவேலை போதனாசிரியர் பதவி

(தொடரெண் : பொ. நி/3/210)

1. முழுப்பெயர் திரு./திருமதி/செல்வி : ————.
(தெளிவான எழுத்துகளில்) :

2. தபால் விலாசம் : ————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாதியம் : ————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது : வரு : ———— மா : ————. நாள் : ————.
(ஆ) பிறந்த திகதி : வரு : ————. மா : ————. நாள் : ————.
(பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்).

5. பின்வருவோர் பிறந்த இடம்—
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா :————
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க—
(i) விவாகத் திகதி : ————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள்—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில்/தொழில் நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும்—
(அ) சிங்களத்தில் : ————.
(ஆ) ஆங்கிலத்தில் : ————.
(இ) தமிழில் : ————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும்—(யாதேனும் பெற்றிருப்பின்) :—
(அ) அவைகள் பெற்ற திகதிகளும் : ————.
(ஆ) படித்த நிலையங்களும் : ————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு மொழிபெயர்ப்பு ஆகிய வற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி—
(அ) சிங்களம் :————. (ஆ) தமிழ் :————. (இ) ஆங்கிலம் :————.

11. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) : ————.

12. சட்ட முறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உமமீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

13. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு ? : ————.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) : ————.

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப்படிகள் அல்ல—இணைத்தனுப்பப்பட வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்—
(அ) படைக் கூற்றின் பெயர் : ————.
(ஆ) வகித்த பதவி : ————.
(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக:———.

17. (அ) பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம்—
(i) வகித்த பதவிகள் : ————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
(iii) விலகியதற்கான காரணம் : ————.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் —
(i) பதவிப் பெயரும் பதவியின் தரமும் : ————.
(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா ? : ————.
(iii) தற்போதைய (சகாயப் படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் : ————.
(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படு, தற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் : ————.
திகதி : ————.

5–1154—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

## சிவில் வான் செலவுத் திணைக்களம்

**விசாரணை எழுதுநர்–தொலைபேசி இயக்குநர் பதவி. (தற்காலிகம்)**

சிவில் வான் செலவுத் திணைக்களத்தில் விசாரணை எழுதுநர்-தொலைபேசி இயக்குநர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய இருக்க வேண்டியதுடன், சிவில் வான் செலவுப் பணிப்பாளர், த. பெ. 535, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற முகவரிக்கு 1969.6.13 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—ஆண்டொன்றுக்கு ரூபா 960 இல் தொடங்கி, ஆண்டொன்றிற்கு ரூபா 72 ஐக் கொண்ட ஏற்றமாக ஆண்டொன்றிற்கு ரூபா 1,752 வரை உயர்ந்து செல்லும்.

3. **வயது எல்லை.**—1969.6.13 ஆம் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். மேற்கூறிய வயது எல்லை, ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கு அமையாது.

4. **விண்ணப்பக்காரருக்கு வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும் :**

(அ) ஒரு பாடமாக ஆங்கில மொழியுடன் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்; அல்லது

இரண்டிற்கு மேற்படாத தடைவைகளிற் பெறப்பட்ட பாடங்களாக சிங்களம்/தமிழ், கணிதம்/எண்கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட ஆறு பாடங்களிற் கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தரம்); அல்லது

இப்பாடங்களுடன் ஒத்ததான அல்லது உயர்வான தேர்வு.

(ஆ) ஆளால் இயக்கப்படும் ஆளிப்பலகைகளை இயக்குவதில் ஆகக் குறைந்தது இரு ஆண்டு அனுபவம்.

5. **சேவை நியதிகள்.**—பதவி தற்காலிகமானதாகும். அரசாங்க சேவைச்சகாய நிதிக்கு உதவுதொகை வழங்குதல் வேண்டும்.

6. பின்வரும் சாதனங்களின் படிகள் (மூலங்கள் அல்ல) விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். இப்படிகள் விண்ணப்பகாரருக்குத் திருப்பி அனுப்பப்பட மாட்டா. சகல மூலச் சான்றிதழ்களும் சாதனங்களும், நேர்முகத் தேர்வின்போது விண்ணப்பகாரராற் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இச்சான்றிதழ்களை அல்லது சாதனங்களைச் சமர்ப்பிக்காதிருக்கின்றமை விண்ணப்பகாரரைத் தகுதியற்றவராக்கிவிடும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். **(நன்கு கவனிக்குக :** சமய திட்சைச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைக்காகிய **பிரமாணத்** தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா).

(ஆ) உயர் கல்வி சான்றிதழ்.

(இ) குணவியல்புச் சான்றிதங்கள் இரண்டு.

(ஈ) முன்னைய அனுபவம்பற்றிய சான்றிதழ்.

இந்த வர்த்தமானியின் பகுதி I, பிரிவு II இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருந்துவதான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றது.

விண்ணப்பங்கள் அல்லது இப்பதவிசம்பந்தமான வேறு தொடர்புகள் சிவில் வான்செலவுப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள வேறு உத்தியோகத்தர் எவருக்கேனும் நேராக அனுப்பப்படக் கூடாது.

டபிள்யூ. எல். பி. டி மெல்,
சிவில் வான் செலவுப் பணிப்பாளர்.

த. பெ. 535, லோட்டஸ் வீதி,
கொழும்பு 1,
1969 ம் ஆண் மார்ச்சு மீ

### விண்ணப்பப் படிவம்

**விசாரணை எழுதுநர்–தொலைபேசி இயக்குநர் பதவி (தற்காலிகம்)**

1. முழுப்பெயர் : ————.
(தனித் தனி எழுத்தில்)
2. அஞ்சல் முகவரி : ————.
3. பிறந்த தேதியும் வயதும் : ————.
4. இலங்கையரா என்பதனைக் குறிப்பிடவும் .—
(i) பரம்பரையால் : ————.
(ii) பதிவால் : ————.
5. சித்தியடைந்துள்ள உயர் தேர்வு : ————.
(சித்தியடைந்த பாடங்களைக் குறிப்பிடுக.)
6. ஆளால் இயக்கப்படும் தொலைபேசி ஆளிப்பலகைகளை இயக்குவதில் உள்ள அனுபவம் பற்றிய விவரங்கள் : ————.
7. இருக்கக் கூடிய விசேட தகைமைகளினதும் கோரிக்கைகளினதும் விவரங்களைக் குறிப்பிடுக : ————.
8. தற்போதைய பதவி/தொழில் விவரங்களைக் குறிப்பிடுக : ————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் உண்மையானவையும் சரியானவையும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விவரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவுக்கு முன் அவ்வாறு காணப்படுமிடத்து நான் தகுதியற்றவராதற்கு ஆளாவேன் என்பதனையும், நியமனத்தின் பின் காணப்படுமிடத்து நட்டஈடின்றி விலக்கப்படுதற்கு ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

5-939—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

இல. எஸ். எச். 205/69

## பொலிசுத் திணைக்களம்

**பெண் பொலிசு கொஸ்தாப்பு பதவிகள்**

இலங்கை பொலிசு சேவையில் உள்ள ஐந்து பெண் பொலிசு கொஸ்தாப்புப் பதவிகளுக்காய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1.7.69 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பாகவோ பதிவுத் தபால் மூலம் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், பொலிசுப் பயிற்சிப் பாடசாலை, எச்சிலன் சதுக்கம், கொழும்பு 1, என்று முகவரியிடப்பட்டு, கீழே தரப்படும் படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இத்திணைக்களத்தால் கொடுக்கப்படமாட்டா. விண்ணப்பப் படிவங்கள் தரும்படியான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமட்டா. விண்ணப்பப் படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் " பெண் பொலிசு கொஸ்தாப்புக்காய விண்ணப்பம் " என்று எழுதப்பட வேண்டும்.

2. **சம்பள விகிதம்:**—

(i) முதலாவது வருடம், வருடமொன்றுக்கு ரூபா 750 ம் ஜீவனப் படி, விசேட ஜீவனப்படி ஆகியவையும்.

(ii) ஒரு வருடத்தின் பின்னர் அவர்கள் வருடாந்தம் ரூபா $\frac{840—1,764}{22 \times 42}$ சம்பளத்தில் வைக்கப்பட்டு, ரூபா 1,050, ரூபா 1,260, ரூபா 1,470 ரூபா 1,638 ஆகிய சம்பள நிலைகளை அடையமுன் தகுதிகாண் தடைகளுக்கு உட்படுவர்.

3. **தேவைப்படும் தகைமைகள் :**—

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்வருவனவற்றிற்குத் திருப்திகரமான சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும்:—

(i) 1.7.69 ல் 19 வயதுக்கு குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவரையும் இருக்கவேண்டும்.

(ii) கல்விப் பணிப்பாளரினால் அனுமதிக்கப்பட்ட ஒரு பாடசாலையில் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்திதவராயோ அல்லது அப்படிப்பட்ட பாடசாலையில் 8 ஆந் தரத்தில் சித்தியெய்தியிருப்பின் அப்பாடசாலை அதிபரால் இது கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சைக்குச் சமமானதென உறுதிப்படுத்தப்பட்டோ இருக்கவேண்டும்.

(iii) இலங்கையராக இருக்கவேண்டும்.

(iv) விவாகமாகதவராக இருக்கவேண்டும்.

(v) உயரத்தில் 5 அடிக்குக் குறையாதவராகவும் நல்ல தேகாரோக்கியம், திறமையான உடலமைப்பு, நல்ல கண்பார்வை ஆகியவை அமைந்தவராக இருக்கவேண்டும்.

(vi) நற்குணமுடையவராக இருக்கவேண்டும்.

(vii) சேவையில் சேர்த்துக்கொள்ளமுன்பு ஒரு வைத்திய பரிசோதனைக்குத் தயாராக இருக்கவண்டும்.

4. **வேலைக்கமர்த்தும் விதிகள்:**—

இப்பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் உடையதும் ஆகும். எனினும், முதல் நியமனம் " புரொவிடன்ற் " நிதி முறைக்கு அமைவதாக இருக்கும், 29.4.1957 ஆம் திகதிய 372 ஆம்

இலக்க திறைசேரி சுற்று நிருபத்திற்கிணங்க நியமதாரிகள் இளைப்பாற்றுச் சம்பள நிலையை அடைய விருப்பம் தெரிவிக்கத் தகுதிவாய்ந்தவர்களாவர்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(i) இந்நியமனம் 3 வருடகாலத்துக்குத் தகுதிகாண் நிலையில் இருக்கும்.

(ii) தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்டத்தின் சரத்துக்களை அமுலுக்குக் கொண்டுவருமுகமாக, இதுவரை ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் எவ்வித விதிகளுக்கும் அமைய நடக்க வேண்டும்.

(iii) அவர்கள் அரசாங்க சேவை அதிகார சபை விதிகள், நடைமுறைக் கைந்நூல் பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள், பொலிசு ஒழுக்காற்று நெறி, பொலிசு அதிபரால் அல்லது அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் விடப்படும் வேறெந்தக் கட்டளைகளுக்கும் அமைய நடக்கவேண்டியிருப்பர்.

(iv) தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தங்கள் தங்கள் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படும் வரை விவாகம் செய்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், எனினும், இரண்டு வருட திருப்திகரமான சேவையின்பின் தகுதிகாண் நிலையிலுள்ள பெண் பொலிசு கொஸ்தாப்புமாரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு விடயத்தின் தகுதியையும் பொறுத்து பொலிசு அதிபர் அனுமதி அளிப்பார்.

6. இவ்வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்கு உரிய பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

7. விண்ணப்பதாரிகள் தங்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை இணைக்கவேண்டும் :—

(i) பிறப்புச் சான்றிதழ்,

(ii) ஒழுக்கம் சம்பந்தமான அண்மையில் பெற்ற இரு சான்றிதழ்கள்.

(iii) கல்வித்தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

8. பெண் பொலிசு கொஸ்தாப்புமாருக்கு இலவச வதிப்பிடம், இலவச கோலவுடைகள், இலவச அணிகலப் பெட்டி, துடைப்பம், சப்பாத்துக்கள் ஆகியன கொடுக்கப்படுகின்றன.

9. முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இவ்வறிவித்தலுக்கு அமையாத விண்ணப்பங்களும், நிராகரிக்கப்படும். அப்படியான விண்ணப்பதாரிகளுக்கு மறுமொழிகள் அனுப்பப்படமாட்டா.

ஈ. எஸ். அபேகுணவர்த்தன,
பொலிசு அதிபர்.

பொலிசுத் தலைமைக்காரியாலயம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு மே மீ 19 ந் உ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பெண் பொலிசு கொஸ்தாப்பு பதவி—பொலிசுத் திணைக்களம்**

1. முழுப்பெயர் : ————.
(தெளிவான எழுத்துக்களில்)
விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியே

2. (அ) தற்போதய முகவரி.
(ஆ) தற்போதய முகவரிக்குக் கிட்டிய பொலிசு நிலையம்.

3. உயரம் : ————.

4. 1.7.1969 ல் வயது : ————. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்).

5. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சையைக் குறிப்பிட்டு, சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) : ————.

6. விவாகமானவரா ஆகாதவரா : ————.

7. தகப்பனாரின் முழுப்பெயர் : ————.

8. தகப்பனாரின் தொழில் : ————.

9. (அ) சாகியம் : ————.
(ஆ) பிறப்பினால் இலங்கைப் பிரசையா அல்லது பதிவுமூலமா (பதிவு மூலமாயின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.)
(இ) வம்சாவழியாக இலங்கைப் பிரசையாயின் பின்வருவோர் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும்.
(i) விண்ணப்பாாரர் : ————.
(ii) விண்ணப்பதாரரின் தகப்பன் : ————.
(iii) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.
(iv) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப் பூட்டன் : ————.

10. தற்போது வேலைபார்க்கிறீர்களா ? அப்படியாயின் விபரங்கள் கொடுக்கவும் : ————.

11. உங்கள் உறவினர்கள் யாராவது ஏதாவது குற்றங்களில் சம்பந்தப்பட்டு, அல்லது கட்டளை அனுப்பப்பட்டு, அல்லது குற்றஞ்சாட்டப்பட்டு, அல்லது குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கிறார்களா ? அப்படியாயின் விபரங்கள் கொடுக்கவும் : ————.

12. இதற்கு முன்பு பெண் பொலிசாகச் சேர விண்ணப்பித்தீரா ? அப்படியாயின் திகதியைக் குறிப்பிடவும் : ————.

13. விசேட தகைமைகள் ஏதும் இருப்பின் : ————.

நான் அறிந்தவரை மேற்காணும் விபரங்கள் உண்மையானதும், சரியானதும் என்று உறுதி கூறுகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

5-1041—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## இலங்கை விலங்கினக் காட்சிச்சாலை, தெஹிவலை

### தோட்ட மேற்பார்வையாளர் பதவி

பின்வரும் தகைமைகளையுடைய இலங்கையர்களிடமிருந்து மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

2. ***தகைமைகள்.***—*வயது—1969.5.1 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.*

***கல்வித் தகைமைகள்.***—*குறைந்தது 8 ஆம் வகுப்பிலாவது சித்தியெய்தியவராயிருத்தல் வேண்டும்.*

***பிற தகைமைகள்.***—*தொழிலாளர்களைக் கையாளுவதிலும், தோட்ட வேலையிலும் மிகச் சிறந்த அறிவும், அனுபவமுமுடையவராயிருத்தல் வேண்டும். ஹக்கல்ல, பேராதெனியாத் தோட்டங்களிற் பயிற்றுவிக்கப்பட்டவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். உடனலமுடையவராயிருத்தல் வேண்டும்.*

*3. **வேலை நிபந்தனைகள்.**—பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பளத்திற்குமுரியதாகும். தகுதிகாண் நிலைக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.*

*4. **சம்பளம்.**—இப்பதவி வருடமொன்றிற்கு ரூபா : 834—42—ரூபா 1,296 ஆகிய சம்பள அளவுத் திட்டத்தையுடையதாகும்.*

*5. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள் (மாதிரிப் படிவம் இதன்கீழ் காட்டப்பட்டிருக்கின்றது) 1969.6.16 ஆந் திகதியன்று அல்லது முன்னதாக தெஹிவலை விலங்கினக் காட்சிச்சாலை அதிபதியை அடையக்கூடியதாகப் பதிவு அஞ்சல் மூலமனுப்பி வைத்தல் வேண்டும்.*

*ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்களங்களின் தலைவர்களூடாகவே அனுப்பி வைத்தல் வேண்டும்.*

*டபிள்யூ. எல். ஈ. த அல்விஸ்,*
*அதிபதி.*

*விலங்கினக் காட்சிச்சாலை,*
*தெஹிவலை, 1969.5.17.*

மாதிரிப் படிவம்

**தெஹிவலை, விலங்கினக் காட்சிச்சாலைத் தோட்ட மேற்பார்வையாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் :————.

2. தபால் முகவரி :————.

3. 1969.5.1 ஆந் தேதியிலன்று வயது :————.
பிறந்த திகதி :————.

4. இலங்கைக் குடியாயிருத்தல் பரம்பரையாகவா அல்லது பதிவு வழியாகவா :————.

5. கல்வித் தகைமைகள் :————.

6. அனுபவம், ஏதாவதிருப்பின் :————.

7. நீதிமன்றமெதிலாவது எப்போதாவது நீர் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளீரா ? :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை யென்றும் சரியானவை யென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ, தெரிவிற்குமுன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப்பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் அறிவேன்.

:————.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

5-1148—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**வானொலி சேவையாளர் பதவி**

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வானொலி சேவையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்த் தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, "நீர்ப்பாசன அதிபர், த.பெ. இல. 1138, கொழும்பு 7" என்ற முகவரிக்கு, 1969 ஜூன் 20 ம் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாய் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

2. **ம்பள அளவுத்திட்டம் :**
ஆண்டு ரூபா 1,320—72—ரூபா 2,184.

3. **வயது எல்லை :**
1969 மே மாதம் 30 ம் திகதியன்று அபேட்சகர்கள் 17 வயதிற்குட்படாதவர்களாயும் 30 வயதிற்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலிருப்பவர்களுக்கு வயது எல்லை கணிக்கப்படமாட்டாது)

4. **வேண்டிய தகைமைகள் :**
ஒவ்வொரு அபேட்சகரும் சமர்ப்பிக்கவேண்டிய திருப்திகரமான சான்று, அவர்

(அ) ஒரு இலங்கையராயிருத்தல் வேண்டும். ("இலங்கையர்" என்பது பரம்பரை அல்லது பதிவு இலங்கைக் குடியானவர்)

(ஆ) மாசற்ற நற்குணமுடையவராயும் உடல் நலம் வாய்ந்தவராயுமிருத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் கல்வித் தகைமைகளும் தேவையான அனுபவமும்,

(1) இரு தடவைகளுக்கு மேற்படாவண்ணம் சிங்கள/தமிழ் மொழி, கணிதம், பௌதிகவியல் ஆகியன உட்பட ஆறு பாடங்களில் பொ.க.த. பத்திர (சாதாரணம்) தரத்துடனும்,

(2) வானொலி சாதனத்தைப் பழுதுபார்த்தலிலும் பராமரிப்பிலும் குறைந்தபட்சம் 5 வருடகாலம் செய்முறைக்குரிய அனுபவம் வாய்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **தொழிலின் நியதிகள் :**
பதவி நிரந்தரமானதும் உபகாரச்சம்பளமுடையதுமாகும். விதவையர் அனாதையர் உபகாரச் சம்பளத் திட்டத்திற்கு உதவு பணம் செலுத்துதல் வேண்டும்.

6. விண்ணப்பத்தாரர் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை (மூல சாதனங்களை அல்ல) இணைத்தல் வேண்டும். இவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது.

(i) பெற்றுள்ள கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.

(ii) வானொலி சாதனத்தை பழுதுபார்த்தலிலும் பராமரிப்பிலும் அடைந்துள்ள குறைந்தபட்சம் 5 வருட செய்முறைக்குரிய அனுபவத்தை ஆதரிக்கும் சாதனச் சான்று.

(iii) சமீபத்தில் பெற்றுள்ள மூன்று நற்சாட்சிப்பத்திரங்கள். (இதில் ஒன்று கடைசியாகப் படித்த பாடசாலைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளதாயிருத்தல் வேண்டும்)

(iv) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

குறிப்பு :
சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பத்தாரரின் பிறப்பு, பதிவு செய்யப்படாதிருக்குமாயின் வயதைக் கணிக்கும் பொருட்டு பதிவாளர் தலைமை அதிபதியால் வழங்கப்படும் விசேஷ வயதுச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படும்.

7. அரசாங்க சேவையில் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் முதலாம் பாகம் இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

ரி. பத்மநாதன்,
நீர்ப்பாசன அதிபருக்காக.

த.பெ. இல. 1138,
கொழும்பு 7,
1969 மே மாதம், 21 ம் தேதி.

### விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம்

**வானொலி சேவையாளருக்கான பதவி—நீர்ப்பாசனத் திணைக்களம்**

1. விண்ணப்பத்தாரரின் முழுப்பெயர் :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. (அ) விண்ணப்பதாரர் பிறந்த திகதியும் இடமும் :————

(ஆ) விண்ணப்பத்தாரர் இலங்கையில் பிறந்தவராயின் கீழ் தரப்பட்டுள்ள (i) ஐ அல்லது (ii) யும் (iii) யும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தாரர் இலங்கையில் பிறவாதவராயின் கீழ் தரப்பட்டுள்ள (i) யும் (ii) யும் அல்லது (ii) யும் (iii) யும் நிரப்புதல் வேண்டும்.

(i) விண்ணப்பத்தாரரின் தந்தையார் பிறந்த இடம் :————.

(ii) விண்ணப்பத்தாரரின் தந்தை வழிப் பாட்டனார் பிறந்த இடம் :————.

(iii) விண்ணப்பத்தாரரின் தந்தை வழி முப்பாட்டனார் பிறந்த இடம் :————.

4. தேசிய இனம் :————.
5. விவாகமானவரா, தனித்தவரா அல்லது தாரமிழந்தவரா ? :————.
6. சித்தியடைந்துள்ள பாடங்களுடன் கல்வித் தகைமைகள் :————.
7. வானொலி சாதனத்தைப் பழுதுபார்ப்பதிலும் பராமரிப்பதிலும் பெற்றுள்ள அனுபவத்தின் விபரங்கள் ————.
8. தற்பொழுது பார்க்கும் தொழில் (ஏதேனும் இருந்தால்) (நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா எனக்குறிப்பிடவும்) :————.
9. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியவர்களின் பெயர்களும் நியமனங்களும்:————
1. ————.
2. ————.
3. ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்ட பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பத்தாரரின் கையொப்பம்.

இடம் :————.

திகதி :————.

5-1078—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

## நிருவாகக் கல்விக் கழகம், பொதுத்திறைசேரி

### வெளிநாட்டில் பயிற்சி

### ஒட்சுபோட்டு எலிசபெத்து இராணி இல்லத்தில் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் இணையுரிமைப் பரிசில்கள்

ஒட்சுபோட்டு எலிசபெத்து இராணி இல்லத்தில் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் இணையுரிமைப் பரிசில்களை அளிப்பதற்காக அரசாங்க சேவையிற் சிரேட்ட பதவியினர் தர உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன.

இவ்விணையுரிமைப் பரிசில்கள், ஒருவர் தமது அரச கடமைப் பணிகளுக்குப் பொருத்தமானவிடயத்தில், ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு பயிற்சி நெறியின் பங்குபற்றுமல் தனியாகக் கற்கும் அடிப்படையில் ஒட்சுபோட்டில் சில காலம் கழிப்பதற்கேதுவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவை மிகத்திறமையும் சிறப்பும் வாய்ந்தோர்க்குச் சிரேட்ட அளிப்பாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது; தமது குறிப்பான துறையில் ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு ஓய்வு விடுதலையாகக் கருதப்படும். இவர்கள் தமது அரசகருமப் பொறுப்புக்களிலிருந்து ஒரு. காலத்துக்கு விடுவிக்கக்கூடியவராயிருக்க வேண்டும். இக் காலத்தில் தமது அறிவை விருத்தி செய்து தமக்கும் தமது நாட்டுக்கும் பயனளிக்கக்கூடிய ஒரு துறையில் உயர்தொழில் கல்வி அறிவு பெறுதல் வேண்டும். அவர் கல்வித்துறை பற்றி எவ்வித கட்டுப்பாடுமில்லை. ஆனால் அது அப்பரிசு பெறுபவரின் கடமைகளுக்குப் பொருத்தமாயிருக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் பின்வருவனவற்றில் டிப்புளோமாவுக்கு அல்லது சான்றிதழ்களுக்கு அவர்கள் ஓராண்டில் படிக்கலாம் :—

கமத்தொழில் பொருளாதார டிப்புளோமா, பிரயோக புள்ளிவிவரவியல் டிப்புளோமா, பொருளாதார அபிவிருத்தி டிப்புளோமா, சமூகக் கல்வியியல் விசேட டிப்புளோமா, முகாமைக் கல்வியில் சான்றிதழ்.

**தகவுதிறன் :—**

(i) விண்ணப்பக்காரர் அரசாங்க சேவையில், முது முறையுடன் பதவியினர் தர உத்தியோகத்தர்களாக பொறுப்புவாய்ந்த ஒரு பதவியில் குறைந்தது ஏழாண்டுச் சேவை செய்தவராயிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பக்காரர் 30 முதல் 45 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் நல்ல பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்குத் தெரிந்தெடுக்கப்படும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் 627 ஆம் இல. திறைசேரிச் சுற்றறிக்கைக்கிணங்க ஒரு உடன்படிக்கைக்குக் கையொப்பமிடல் வேண்டும்.

**அளிப்புக்களின் நியதிகள்.—**

(i) ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்று திரும்புவதற்குப் பயணச்செலவு.

(ii) மாத வாழ்க்கைப்படி.

(iii) கல்விச் செலவுகள்.

**விண்ணப்பங்கள் :**

மாதிரிப் படிவத்தில் இருக்க வேண்டிய விண்ணப்பங்கள் நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர், 32, கிளென் ஆபர் இடம், கொழும்பு 3 என்னும் முகவரியை 1969 யூன் மாதம் 15 ஆந் தேதிக்குப் பிந்தாமல் சென்றடைதல் வேண்டும். விண்ணப்பங்கள் அவரவர் நிரந்தரச் செயலாளர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். மேலும் விவரங்களுக்கு, நிருவாகக் கல்விக் கழகத்துடன் தொலைபேசி 36236—சாதாரண வேலை நேரங்களில் தொடர்பு கொள்க.

காலந்தாழ்த்தி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எச். எஸ். வனசிங்க,
நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர்,
திறைசேரிச் செயலாளருக்காக.

## நிருவாகக் கல்விக் கழகம்—பொதுத் திறைசேரி

### வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பம்

(முதலாம் பாகம்)

1. விண்ணப்பித்துள்ள பயிற்சி நெறியின் பெயர் :————.
2. உத்தியோகத்தரின் பெயர் :————.
3. பிறந்த தேதியும்:————. 1969.5.1. இல் வயதும் :————.
4. சேவையும் தரமும் :————.
5. அரசாங்கச் சேவையில் சேர்ந்த தேதி (பதவித்தரம்) : ————
6. அரசாங்க சேவையில் வகித்த பதவிகள், தேதிகளுடன் : ————
7. கல்வித் தகைமைகள் :————.
8. மொழிகளில் தேர்ச்சி :————.
9. குறித்த உத்தியோகத்தர் வெளிநாடுகளில் பெற்றுள்ள பயிற்சி, சென்றுள்ள ஆய்வரங்கு, மாநாடு முதலியன :————.
10. குறித்த உத்தியோகத்தர் இலங்கையில் பெற்றுள்ள பயிற்சிகளினதும் பிற கல்வி சம்பந்தமான முயற்சிகளினதும் விவரங்கள் :————.

11. 9, 10 இல் கூறப்பட்டுள்ள முயற்சிகள் காரணமாக குறிப்பிட்ட எத்துறையிலும் குறித்த உத்தியோகத்தர் செய்துள்ள மாற்றங்கள், திருத்தங்களின் விபரங்கள் :————.

12. குறிப்பிட்ட இப்பயிற்சி நெறியைப் பெறுவதால் நீங்கள் எத்தகைய பொறுப்புக்களை ஆற்றலாமென எண்ணுகிறீர்கள் :————.

........................ஆகிய நான் என்னுல் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் எனது நம்பிக்கைக்கெட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையுமெனச் சான்றளிக்கின்றேன். நான் பயிற்சி பெறுவதற்குத் தெரியப்பட்டால், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர் கோரும் அத்தகைய கட்டளைகளை நிறைவேற்றும் பொறுப்பையும் அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்கி ஒழுகும் பொறுப்பையும் மேற்கொள்கின்றேன்.

————,
கையொப்பம்.

தேதி :————.

(இரண்டாம் பாகம்)

............................................ திணைக்களத்து திரு. .......................................... என்பவரின் விண்ணப்பம் விதந்துரைக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. அவர் தெரியப்பட்டால் பயிற்சிநெறி பெறுவதற்கு விடுவிக்கப்படுவர்.

திரு. ........................................ இப் பயிற்சி பெறச் சென்றுல், அவர் திரும்பி வருகையில், பின்வரும் மேலதிகப் பொறுப்புக்கள் அவருக்கு ஒப்படைக்கப்படும் :—

இந்த மேலதிகப் பொறுப்புக்களுக்காக திரு............. என்பவருக்குப் பயிற்சித் திட்டத்தின் பின்வரும் விடயங்கள்/இயல்புகள்/சிறப்புக்கூறுகள் ஏற்றனவாகுமென நான் கருதுகிறேன் :—

————,
நிரந்தரச் செயலாளர்,
............................ அமைச்சு.

தேதி:————

5-1109—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## நிருவாகக் கல்விக் கழகம், பொதுத் திறைசேரி
## வெளிநாட்டில் பயிற்சி

### கைத்தொழில் அபிவிருத்தி நிருவாகம், ஆசிய கழகம்

கைத்தொழில் அபிவிருத்தி நிருவாகத்தில் பன்னிரு கிழமைப் பயிற்சி நெறி சம்பந்தமாகப் புலமைப் பரிசில் அளிப்பதற்காக அரசாங்க சேவையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலுமுள்ள உயர்பதவி உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன ; இப் பயிற்சி நெறி பாங்கொக்கில் ஐக்கிய நாட்டு ஆசியக் கழகத்தில், 1970 சனவரி மாதம் முதல் மார்ச்சு மாதம் வரை நடைபெறும்.

**தகவுத்திறன்**

(i) விண்ணப்பக்காரர்கள் அரசாங்க சேவையிலும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் பதவியினர் தரத்தில் சிரேட்ட உத்தியோகத்தர்களாக, ஒரு பொறுப்பு வாய்ந்த பதவியில் குறைந்தது ஏழாண்டுகளேனும் சேவை செய்தவராகவிருத்தல் வேண்டும்.

(ii) 1. 6. 1969 இல் 35 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்காகத் தெரிந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் 627 ஆம் இல. திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு உடன்படிக்கைக்குக் கையொப்பமிடல் வேண்டும்.

இப்பயிற்சிநெறி, பொருளாதார அபிவிருத்தியில் கைத்தொழில் மயமாக்கலின் தன்மை, கைத்தொழில் மயமாக்கலுக்கு வேண்டிய பொருளாதார அமைப்பு, அதன் உள்ளமைப்பு, கைத்தொழில் தொடர்பு, திட்டங்களின் பொருளாதார, நிதி சம்பந்தமான பாகுபாட்டுக்கு வேண்டிய அடிப்படைக் கருவிகள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டதாகும். இப்பயிற்சிநெறியின் பெரும்பாகம் ஒரு திட்டத்தை உருவாக்கல், மதித்தல், செயற்படுத்தலுடன் தொடர்புள்ளதாகும். கைத்தொழில் மயமாக்கலைத் திருத்துவதற்கு வேண்டிய கொள்கைகளுக்கும் பிற நடவடிக்கைகளுக்கும் முதன்மையளிக்கப்படும். பொறித் தொகுதிகள் உள்ள இடங்களைச் சென்று பார்ப்பதற்கும் அவை பற்றி ஆராய்ந்து, திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்படும். பயிற்சியில் ஒருபகுதியாக தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு கைத்தொழில் திட்டத்தில் செய்முறை வேலையும், மதிப்பீட்டு அறிக்கையைத் தனியாக அல்லது சிறு தொகுதியாகச் சேர்ந்து தயாரித்தலும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிமுறை குறிப்பாக (அ) கைத்தொழில் துறையில் விசேட நிகழ்ச்சி முறை நிருவாகிகளுக்குத் துரிதமான பயிற்சியும் (ஆ) தனியார்துறையிலுள்ளவர்கட்கும் கைத்தொழிலுடன் சம்பந்தமான அரசாங்க, அல்லது அரசாங்க ஆதரவு பெற்ற நிருவாகத்துறையிலுமுள்ள உத்தியோகத்தர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்தித்துறையில் பயிற்சியும் அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**அளிப்புக்களின் நியதிகள்**

(i) பாங்கொக்குக்குச் சென்று திரும்புவதற்குப் பயணச் செலவு.

(ii) மாத வாழ்க்கைப்படி.

(iii) கல்விச் செலவு.

**விண்ணப்பங்கள்**

மாதிரிப் படிவத்தில் இருக்க வேண்டிய விண்ணப்பங்கள் நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர், 32, கிளென் ஆபர் இடம், கொழும்பு 3, என்னும் முகவரியை 1969 யூன் மாதம் 16 ஆந் தேதிக்குப் பிந்தாமல் சென்றடைதல் வேண்டும். விண்ணப்பங்கள் அவரவர் நிரந்தரச் செயலாளர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். மேலும் விவரங்களுக்கு, நிருவாகக் கல்விக் கழகத்துடன் தொலைபேசி 86236—சாதாரண வேலை நேரங்களில் தொடர்பு கொள்க.

காலந்தாழ்த்தி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

எச். எஸ். வனசிங்க,
நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர்,
திறைசேரிச் செயலாளருக்கா.

## நிருவாகக் கல்விக் கழகம்—பொதுத் திறைசேரி
### வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பம்
(முதலாம் பாகம்)

1. விண்ணப்பித்துள்ள பயிற்சி நெறியின் பெயர் :————.
2. உத்தியோகத்தரின் பெயர் :————.
3. பிறந்த தேதி :————. ......... இல் வயது :————.
4. சேவையும் தரமும் :————.
5. அரசாங்கச் சேவையில் சேர்ந்த தேதி (பதவித்தரம்) : ————.
6. அரசாங்க சேவையில் வகித்த பதவிகள், தேதிகளுடன் : ————.
7. கல்வித் தகைமைகள் :————.
8. மொழிகளில் தேர்ச்சி :————.
9. குறித்த உதியோகத்தர் வெளிநாடுகளில் பெற்றுள்ள பயிற்சி, சென்றுள்ள ஆய்வரங்கு மாநாடு முதலியன : ————.

10. குறித்த உத்தியோகத்தர் இலங்கையில் பெற்றுள்ள பயிற்சிகளினதும் பிற கல்வி சம்பந்தமான முயற்சி களினதும் விவரங்கள் :————.

11. 9, 10 இல் கூறப்பட்டுள்ள முயற்சிகள் காரணமாக குறிப்பிட்ட எத்துறையிலும் குறித்த உத்தியோகத்தர் செய்துள்ள மாற்றங்கள், திருத்தங்களின் விவரங்கள் :————.

12. குறிப்பிட்ட இப்பயிற்சி நெறியைப் பெறுவதால் நீங்கள் எத்தகைய பொறுப்புக்களை ஆற்றலாமென எண்ணுகிறீர்கள் :————.

.................................... ஆகிய நான் என்னால் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் எனது நம்பிக்கைக்கெட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையுமெனச் சான்றளிக்கின்றேன். நான் பயிற்சி பெறுவதற்குத் தெரியப்பட்டால், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர் கோரும் அத்தகைய கட்டளைகளை நிறைவேற்றும் பொறுப்பையும் அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்கி ஒழுகும் பொறுப்பையும் மேற்கொள்கின்றேன்.

————,
கையொப்பம்.

தேதி :————.

(இரண்டாம் பாகம்)

........................ திணைக்களத்து திரு. ............... ...................................................... என்பவரின் விண்ணப்பம் விதந்துரைக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. அவர் தெரியப்பட்டால் பயிற்சிநெறி பெறுவதற்கு விடுவிக்கப்படுவர்.

திரு. ........................................ இப் பயிற்சி பெறச் சென்றால், அவர் திரும்பி வருகையில், பின்வரும் மேலதிகப் பொறுப்புக்கள் அவருக்கு ஒப்படைக்கப்படும் :—

இந்த மேலதிகப் பொறுப்புக்களுக்காக திரு. ................. .................. என்பவருக்குப் பயிற்சித் திட்டத்தின் பின்வரும் விடயங்கள்/இயல்புகள்/சிறப்புக்கூறுகள் ஏற்றனவாகுமென நான் கருதுகிறேன் :—

————,
நிரந்தரச் செயலாளர்,
......................... அமைச்சு.

தேதி :————.

5-1110—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### காலி ஸ்தானங்கள்

சபையின் சிவில் பொறியியல் பகுதியில் IV ஆம் தர உதவி சிவில் பொறியியலாளர்கள் பதவிகட்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டம் (எல்லாமுட்பட).—**
மாதாந்தம் ரூபா 700—5 × 40, 6 × 50—ரூபா 1,200.
ரூபா 900 க்கு முன்பும் ரூபா 1,050 க்கு முன்பும் வினைத் திறமை காண் தடைகளுண்டு.

3. **தகைமைகள்.—**
(i) வயது—1.5.1969 ஆம் திகதியன்று 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்க வேண்டும்,
(ii) பி. எஸ். சீ. பொறியியல் (சிவில்) பட்டம்;
அல்லது
சிவில்/அமைப்பு முறை பொறியியல் நிலையத்தின் I ஆம் II ஆம் பகுதிகளில் சித்தியெய்தியிருப்பதுடன் இத்தகைமைகள் பெற்ற பின்பு மூன்று ஆண்டு அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தி, அவரின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்குமேற்ப மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் தக்கதோர் சம்பள நிலையில் அமர்த்தப்படலாம்.)

4. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ம் பிரிவின் நியதிகளிற்கு எற்க சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

5. **வேலை நிபந்தனைகள்.—**
தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் —
(1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.
(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக்கூடியதுமான சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.
(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக் கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருதற்குச் சபையால் விதிகப்பட்ட தராதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும்.
(4) தங்களது சம்பளத்தில் 10 சத விகிதத்தைச் சபையின் சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். சபை 15 சதவிகிதத்தைச் செலுத்தும்.
(5) இலங்கையில் எப் பகுதியிலேனும், சபையின் எப் பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எனக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாராகேன்பிட்டி,
கொழும்பு 5.

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### மாதிரிப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி : ————.
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ————.
3. தபால் முகவரி : ————.
4. பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல—இணைக்கப்படவேண்டும்).
5. 1.5.69 ம் திகதியன்று சரியான வயது : ————.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ?
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? ————.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்).
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி : ————.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக.)
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள்—(மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படல் வேண்டும்) :————.
10. தொழினுட்பத் தகைமைகள் :————.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர்தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள்—(மூலப் பிரதிகள் அல்லது—இணைக்கப்படல் வேண்டும்).
11. தொழில் : ————.
(பாடசாலை விட்டு விலகியபின் பார்த்த வேலைகளின் விபரம். அதாவது, பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக).
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்று பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம். : ————.
(வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக.)
13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப்பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப்பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக).
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தராதரம் :————

15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச்சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? ————.
16. வேறேதேனும் விபரங்கள் : ————.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் ஏதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? ————.
அங்ஙனமாயின் விவரங்கள் தருக : ————
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் விலாசங்களும் :————.
(1) ————.
(2) ————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும், தெரிவிற்குப்பின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

5-1056—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) பட்டதாரிப் பயிற்சியாளர்கள்

தேவையான தகைமைகள் :—

(அ) முதலாவது அல்லது இரண்டாவது தரப்பட்டதாரி அல்லது

(ஆ) பட்டப்பரீட்சையில் ஒன்று அல்லது பல விஞ்ஞானப் பாடங்களில் சித்தியெய்தியவர்கள்.
அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் அல்லது புவியியலில் விசேஷ பட்டம் பெற்றவர்கள்.

*வயது.—6.6.69 ல் 26 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.*

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் பயிற்சி காலத்தில் செலவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 500/- பெறுவர். ஒரு வருடத்திலிருந்து இரண்டு வருடத்திற்குள்ளான இப்பயிற்சியில் திருப்திகரமாய்ச் சித்தி பெறுவோர் கூ. மொ. விற்பனவு ஸ்தாபன சேவையாளர்களாகப் பின்வரும் சம்பள விகிதத்தில் நியமனம் பெறுவர்.

*சம்பள விகிதம்.—ரூபா 600/—10 × 40, 5 × 50—1,250/- (மொத்தமாக).*

உதவிக் கட்டிடப் பொறியியலாளர்கள் (இஞ்சினியர்கள்)

தேவையான தகைமைகள்.—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் B. Sc. பட்டம்.

*சம்பள விகிதம்.—ரூபா 600/—10 × 40, 5 × 50—1,250/- (மொத்தமாக).*

*வயது.—6.6.69 ல் 30 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.*

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் A.M.I.C.E. அல்லது A. M. I. Strut. E. பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருந்தால் தான் அன்னாரின் சம்பளம் ரூ. 1000/- க்கு மேற்பட்டபின், வருடாந்தச் சம்பள உயர்வு பெறத்தகுதியடைவார்கள். ஏற்கனவே மேற்படி பரீட்சைகளில் தேறியவர்களுக்கு மேற்குறிப்பிட்ட சம்பள விகிதத்தில் தகுந்த நிலையில் நியமனம் பெறத்தகுதி வாய்ந்தவர்களாவர்.

விண்ணப்பங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தராதரப் பத்திரமாகியவற்றின் பிரதிகளையும், விண்ணப்பதாரர்களின் குண நடை திறமைபற்றிச் சிபார்சு செய்யும் இருவருடைய பெயர்களையும் விலாசத்தையும் குறிப்பிட்டு 6.6.69 ல் அல்லது அதற்கு முன்னதாக கூ. மொ. விற்பனவு ஸ்தாபன ஆட்கள் தொகுதி முகாமையாளருக்கு, கொழும்பு, வக்சால் வீதி, 21 இலக்கத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஆட்கள் தொகுதி முகாமையாளர்.

5-1083—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/23-4/13 (ஜீ)

## பொது எழுதுவினைஞர் சேவையில் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—1969 ஓகத்து

1957.11.15 இன் 1/36/2/1 (ஜீ) திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தினாலும் 1967.11.26 இன் ஜீ (162) இலக்கத் திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தினாலும் திருத்தப்பட்டவாறுள்ள 1955.10.1 இன் 10,844 இலக்கத்தையுடைய அரசாங்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொது எழுதுவினைஞர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு " இ " இல் விதித்த பொது எழுதுவினைஞர் சேவையின் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பின் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமைக்காண் தடைப்பரீட்சை 1969 ஓகத்து 4 ஆந் தேதியில் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும். இப்பரீட்சையை நடாத்துவதற்கென அவரினால் விதிக்கப்பட்ட விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர்.

3. இவ் அறிவித்தலின் சிங்கள, ஆங்கிலப் பகுதிகளின் கீழ் இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்டுள்ளது. 67.11.26 இன் ஜீ (162) இலக்கத் திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்தின் இரண்டாம் பந்தியிலுள்ள பணிப்புரைகளுக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கும் அவை சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலே வீதி, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரியை 1969 யூன் 30 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னர் அடையத்தக்கதாக, திணைக்களத் தலைவர்கள் வழியாக **பதிவு அஞ்சல்** மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பும் கடித உறையின் இடது பக்கம் மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு தேதிக்குப்பின் பெறப்படும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

4. விண்ணப்பம் ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் புக விடுதலட்டையும் நேர அட்டவணையும் பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்படும். பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்பு புகவிடுதலட்டை கிடைக்கப்பெறாவிட்டால் அப்பரீட்சார்த்தி கொழும்பு, அ. பெ. இல. 1503 கொம்பனித் தெரு, மலே வீதியிலுள்ள பரீட்சை ஆணையாளருடன் (தந்தி முகவரி : " எக்சாம்சு "

கொழும்பு) தாமதமின்றித் தொடர்பு கொள்ளல் வேண்டும். அவர் தமக்குப் புகவிடுதலட்டை கிடைக்கவில்லையென்பதைப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவிப்பதுடன் பின்வரும் தகவல்களையும் கொடுத்தல் வேண்டும்.

(1) பரீட்சைப் பெயர் :

(2) முழுப் பெயர் :

(3) முழு அஞ்சல் முகவரி :

(4) அஞ்சல் அலுவலகம், பதிவு எண், அனுப்பிய தேதி.

பி. டி. உடுவெல,
திறைசேரி மேலதிகப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு மே 21 ந் உ.

### பரீட்சைப்பகுதி அலக்கம்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படும்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டு பண்ணு நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7 வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்

பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துக்குள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலிய வற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேருெருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களின் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு—

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை, மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபித்தற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனல் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள் ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாருக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலிய வற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதிவிடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்ருேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவருன இலக்கங்களின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமாஞல், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு பட்த்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (**வலது பக்க மேல் மூலையிலன்று**) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினக்கள் தெரிவுக்குரிய வினக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

கே. ரி. டபிள்யூ. சுமனசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப்பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

5-1081—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

இல. 1/23/8/15 (ஜி)

## பேச்சு மொழிபெயர்ப்பாளருக்குப் பரீட்சை செற்றம்பர், 1969

*பரீட்சைத் தேதி.*—பேச்சு மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்படுவதற்குத் தகைமைபெற விரும்பும் பொது எழுதுவினைஞர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு 1969 செத்தெம்பர் 24 ஆந் தேதி தொடங்கிப் பரீட்சைக் கொமிசனரினால் கொழும்பில் பரீட்சை நடாத்தப்படும்.

2. *தகவுத்திறன்.*—தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவர்களும் திறைசேரிப் பிரதிசெயலாளரின் கட்டுப்பாட்டில் கீழுள்ளவருமான நீதிமன்ற பேச்சு மொழிபெயர்ப்பாளராக நியமனம் வகிக்கும் பொது எழுதுவினைஞர் சேவையிலுள்ள உத்தியோகத்தரும் நிர்வாக எழுது வினைஞர் வகுப்பில் இரண்டாந்தர உத்தியோகத்தரும் பொது எழுதுவினைஞர் வகுப்பிலுள்ள உத்தியோகத்தரும் இப்பரீட்சைக்குத் தகுதியுடையவராவர்.

3. *விண்ணப்பங்கள்.*—

(i) இப்பரீட்சைக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பக்காரர்கள் தமது விண்ணப்பங்களை ஒரு முழுத்தாளின் அரைத் தாளில் தயாரித்தல் வேண்டும். (எந்த அளவுப் பத்திரத்திலுமல்ல) ;

(ii) விண்ணப்பங்கள் திருத்தமாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்பட்டு, பரீட்சார்த்திகள் சேவை செய்யும் திணைக்களத் தலைவர்கள் மூலம் 1969 யூன் 21 ஆந் தேதி அன்றோ அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளரைச் சென்றடையுமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இறுதியில் குறிப்பிட்டவாறு சான்றிதழொன்று திணைக்களத் தலைவர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். உரிய தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பம் எவையேனும் நிராகரிக்கப்படும். இப்படிவத்தைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்க மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக எழுதப்படல் வேண்டும். இந் நடவடிக்கைக்கு இணங்கி நடக்கத் தவறும் பரீட்சார்த்தியின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(iii) 1969 யூன் 21 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ பரீட்சை ஆணையாளரைச் சென்றடையத்தக்கதாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டி, பரீட்சார்த்திகள் நேரகாலத்துடன் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர்.

4. *விடுதலை, வத்தா, பிரயாணச் செலவு.*—பரீட்சை ஆணையாளர் ஏற்றுக்கொண்ட விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, அவர்களுக்குத் திணைக்களத் தலைவர்கள் கடமை விடுதலை கொடுக்குமாறு வேண்டப்படுகின்றனர். பரீட்சையில் பின்வரும் ஆகக்குறைந்த புள்ளிகளைப் பெறும் வெளியூர்ப் பரீட்சார்த்திகளுக்கு வத்தாவும் பிரயாணச் செலவும் கொடுக்கப்படும்.

ஆங்கில மொழியில் 30 சதவீதமும் ;

சிங்கள மொழியில் மொத்தப்புள்ளிகளில் 30 சதவீதமும்;

தமிழ் மொழியில் மொத்தப்புள்ளிகளில் 30 சத வீதமும்.

5. *பரீட்சைத் திட்டம்.*—பரீட்சைக்குரிய பாடங்களும் அவற்றுக்குரிய பாடவிதானமும் பின்வருமாறு :—

*பாடம்.—(அ)—ஆங்கிலமொழி* —(இரு மணித்தியாலயப் பரீட்சை) பரீட்சார்த்திகளைப் பின்வருவனவற்றில் சோதிப்பதற்கு வினாக்கள் கொடுக்கப்படும் :—

(அ) எடுத்துரைக்கும் ஆற்றல்.

(ஆ) சராசரி கடினமான பகுதிகளை விளங்கிக்கொள்ளல் (புதினத் தாள்கள், அரசாங்க வெளியீடுகள், அல்லது தற்கால எழுத்தாளரின் நூல்கள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்படும்).

(இ) மொழியின் மரபு முறையிலும் சொல்லாட்சியிலும் அறிவு.

*பாடம்.—(ஆ)—சிங்களமொழி.*—சில எழுத்துப் பரீட்சைகளும் ஒரு வாய்மொழிப் பரீட்சையுமுண்டு.

(அ) **சிங்களமொழி I**—(சிங்கள மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்—1½ மணித்தியாலம்) பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் வேண்டும்.

(i) புதினத்தாளிலிருந்து அல்லது தற்கால உரைநடை நூலிலிருந்து ஒருபகுதி.

(ii) சராசரி கடினமான ஒரு தபால், மனு, உறுதி அல்லது ஓர் அறிக்கை மரபுக் கூற்றுக்களைத் திருத்தமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பரீட்சார்த்தியின் வல்லமையைச் சோதிப்பதற்காக வினாக்களும் கொடுக்கப்படும். மொழிபெயர்ப்புப் பகுதிகள் கையெழுத்தில் கொடுக்கப்படும்.

(ஆ) **சிங்களமொழி II**—(ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மொழி பெயர்த்தல்—1½ மணித்தியாலம்). பின்வருவனவற்றில் ஒன்றையோ அவற்றிற்கு மேற்பட்டவற்றையோ மொழிபெயர்க்குமாறு பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர் :—

நீதவான் நீதிமன்றம், அல்லது மாவட்ட நீதிமன்ற வழக்கில் ஒரு தீர்ப்பு.

ஒரு கட்டளைச் சட்டம், உபவிதி, வர்த்தமானி அறிவித்தல், அன்சாட் அல்லது பிற அரசாங்க வெளியீடு ஆகியவற்றிலுள்ள ஒரு பகுதி.

பரீட்சார்த்திகள் ஆங்கில மரபுத் தொடர்புகளையும் மொழி பெயர்க்குமாறு வேண்டப்படுவர்.

*வாய்மொழிப் பரீட்சை.*—பின்வருவன கவனிக்கப்படும் :—

வழக்கிலுள்ள சாதாரண தொழில் நுட்பத் தொடர்களை மொழி பெயர்த்தல் ; சிங்களத்தில் எடுத்துரைக்கும் வல்லமை ; சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மரபுத் தொடர்களை உச்சரித்தலும் அறிந்திருத்தலும்.

(மறு பக்கம் பார்க்கவும்)

பரீட்சார்த்திகளுக்கு முதன்முதலாகக் கையில் கொடுக்கப் படும் ஆங்கிலக் கடிதம், அறிக்கை, அல்லது பிற அரசகருமப் பத்திரம் ஒன்றை மொழிபெயர்த்து எதுவித முயற்சியுமின்றி வாசகம் எழுதச்சொல்லுமாறு வேண்டப்படுவர்.

பாடம் (இ).—தமிழ்மொழி—இதில் ஈர் எழுத்துப் பரீட்சையும் ஒரு வாய்மொழிப் பரீட்சையும் உண்டு.

(அ) தமிழ்மொழி I—(தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்—1½ மணித்தியாலம்).

(ஆ) தமிழ்மொழி II—(ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு மொழிபெயர்த்தல்—1½ மணித்தியாலம்).

(இ) வாய்மொழிப் பரீட்சை.—தமிழ்மொழி I, தமிழ் மொழி II, வாய்மொழிப் பரீட்சை ஆகியவற்றின் பாடவிதானங்கள் முறையே சிங்கள மொழி I, சிங்கள மொழி II, சிங்கள வாய்மொழிப் பரீட்சை ஆகியவற்றின் பாடவிதானத்தைப் போன்றவை.

6. ஒரு பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒரு பரீட்சார்த்தி பின்வரும் புள்ளிகளைப் பெறல் வேண்டும் :—

ஆங்கிலமொழியில் 40 வீதமும் ;

சிங்கள மொழியில் மொத்தப் புள்ளிகளில் 40 வீதமும் ;

தமிழ் மொழியில் மொத்தப் புள்ளிகளில் 40 வீதமும்.

7. அ, ஆ, இ, பாடங்களுள் இருபாடங்களில் சித்தியடையும் பரீட்சார்த்திகள், 3 ஆம் பாடத்தை மீண்டும் அடுத்து வரும் பரீட்சையில் மாத்திரம் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவர். ஆனால், அவர்கள் சித்தியடைந்த பாடங்கள் ஒவ்வொன்றிலும் மொத்தப் புள்ளிகளில் 50 வீதப் புள்ளி எடுத்திருத்தல் வேண்டும்.

8. பரீட்சை ஆணையாளர் பரீட்சைக்குரிய நடத்தை பற்றி விதிக்கும் விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர். இவ்விதிகள் இவ்வறிவித்தலின் இறுதியில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9. படிகள்.—பொது எழுதுவினைஞர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு (விசேடதர உத்தியோகத்தவர் களல்லாதவர்கள்) மாதத்திற்கு 20 ரூபா படியாகப் பின்வரும் நிபந்தனைகளின் கீழ்க் கொடுக்கப்படும் :—

(i) குறித்த உத்தியோகத்தர் பேச்சு மொழிபெயர்ப்பாளராக வேலை செய்தல் வேண்டும். மேலதிக மொழிபெயர்ப்பாளராக வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் இந்தப் படிக்கு உரிமையுடையவராகார்.

(ii) பேச்சு மொழிபெயர்ப்பாளருக்குரிய பரீட்சையில் அவர்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்பாளராக ஏற்கனவே வேலை பார்க்கும் உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையில் சித்தியடையும்வரை இப்படியைப்பெற உரிமையுடையவராகார்.

(iii) அவர், மூன்றுமாத காலங்களுக்கு ஒரு நீதிமன்றம், முறை மன்று, விசாரணைக்குழு முதலியவற்றின் நடவடிக்கைகளை, நீதவான், நீதிபதி, அதிபர், தலைவர் ஆகியோர் திருப்திப்படுமாறு பேச்சு மொழிபெயர்த்திருத்தல் வேண்டும். இக்காலத்தில் அவருக்கு குறித்த படி கொடுக்கப்படமாட்டாது. நீதவான், நீதிபதி, அதிபர் அல்லது தலைவர் ஆகியோர் திருப்திப்படவில்லையாயின், அவர் ஏற்கெனவே பேச்சு மொழிபெயர்ப்பாளர் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் இப்படியைப் பெறும் உரிமையிலிருந்து தடுக்கப்படுவர். அவ்வாறு தவறினால் பொது எழுதுவினைஞர் சேவையில் பிறிதொரு பதவிக்கு அவர் மாற்றப்படலாம். குறித்த உத்தியோகத்தர் ஒருவர் நீதவான், நீதிபதி, அதிபர், தலைவர் ஆகியோரைத் திருப்திப்படுத்தினால், இந்தப்படி, அவர் பேச்சு மொழிபெயர்ப்பாளர் பரீட்சையில் சித்தியடைந்த தேதியிலிருந்து அல்லது அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து (எது பிந்தியதோ அதிலிருந்து) கடந்தகாலந்தழுவியதாய் அவருக்குக் கொடுக்கப்படும்.

(iv) பேச்சு மொழிபெயர்ப்பாளர் பரீட்சையில் சித்தியடைந்தவரும் இப்படியைப் பெற்றவருமான ஓர் உத்தியோகத்தர் பிறிதொரு வேலைக்கு மாற்றப்பட்டால் அன்னார் பேச்சு மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு மீள மாற்றப்படும்போது அவருக்கு மேலும் பரீட்சையின்றி இப்படியானது கொடுக்கப்படலாம். ஆனால், பேச்சு மொழிபெயர்ப்பாளர் பதவியிலிருந்து மாற்றப்பட்ட காலம் ஓராண்டுக்குக் குறையாயிருத்தல் வேண்டும். அத்தகைய காலம் ஓராண்டிற்கு மேற்படின் அவ்வுத்தியோகத்தர் மீண்டும் அப்படியைப் பெறுவதற்கு முன்னர், மேலே (iii) இன் பிரகாரம் அவரின் தேர்ச்சி சம்பந்தமாக நீதவான், நீதிபதி, அதிபர் அல்லது தலைவரைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

பீ. டி. உடுவெல,
திறைசேரியின் மேலதிகப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு, 1969 ம் ஆண்டு மே மீ 21 ந் உ.

சுட்டெண் :————.
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

## விண்ணப்ப மாதிரிப் படிவம்

### பேச்சு மொழிபெயர்ப்பாளர்களுக்குப் பரீட்சை
### செற்றெம்பர், 1969

1. உமது வழக்கமான கையொப்பம் :————.
   உமது பெயர், முதலெழுத்துக்கள் முன்னெழுதல் வேண்டும் :————.
   பெயர்கள் யாவும் :————.
   (பெரிய எழுத்தில்)

2. முழு அஞ்சல் விலாசம் :————.
   (அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

3. பின்வருவனவற்றைக் கூறுக :—
   (i) ஒரு நீதிமன்றத்தில் பேச்சு மொழிபெயர்ப்பாளராக இப்பொழுது பதவி வகிக்கின்றீரா: ————.
   (ii) பொது எழுதுவினைஞர் சேவையில் வேலை பார்க்கிறீரா, அவ்வாறாயின் உமது வகுப்புத் தரமும் :————.

4. நீர் சேவை செய்யும் திணைக்களத்தின் பெயர் .————.

5. பரீட்சையை முடிப்பதற்கு ஒரு பாடம் மாத்திரம் எடுப்பின் பின்வருவனவற்றைக் கூறுக :—
   (i) நீர் தகைமை பெற்ற முந்திய பரீட்சையின் சுட்டெண் :————.
   (ii) இப்பொழுது எடுக்கும் பாடம் :————.

நான் அறிந்த கூற்றுக்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் உண்மையானவையென, என் நேர்மையின் பேரில் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். நான் நியமிக்கப்படும் எப்பாகத்திலேனும் நான் பேச்சு மொழிபெயர்ப்பாளராகச் சேவை செய்யச் சம்மதிக்கின்றேன். இப் பரீட்சை பிரமாணங்களுக்கிணங்கி ஒழுக நான் சம்மதிக்கின்றேன்.

————,
(திணைக்களத் தலைவர் முன்னர்
பரீட்சார்த்தியின் கையொப்பம்).

தேதி :————.

திணைக்களத் தலைவர் சான்றிதழ்

மேலே காணப்படும் விபரங்களுக்குரிய பரீட்சார்த்தி இப் பரீட்சையில் போட்டியிடுவதற்குத் தகவுடையரென நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————————,
(கையொப்பம், கையொப்பமிடும் உதவி உத்தியோகத்தரின் பதவியும், பெயரும்)

தேதி :————.

————————,
(திணைக்களத் தலைவரின் பதவிப்பெயர்).

## பரீட்சைப் பகுதி, இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத் தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க தேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

#### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ்செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீசார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக் கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீர்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முாணை நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமையவேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல இடங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நோமையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்

பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்டதாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளை பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவும் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றை யிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு,**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளை கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்த பட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத் தாள், ஒற்றுத்தாள், கனனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாக கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக்கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசை மேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில், அழி றப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலிய வற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழுவிடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படவேண்டும்.

(ix) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்கு படுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லை என எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டவேண்டும்.

கே. ரீ. டபிள்யூ. சுமனசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

5-1099—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை 1969.6.27 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம்: (அ) முன்னைய இருப்பு உள்வரும் பொருட்கள் (ஆ) கப்பலிலிருந்து உட்கொணரப்பட்டு கிருலப்பனை மத்திய வேலைத்தளத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25/- கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ஆம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி 1969.6.26 நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1 காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமான பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறுமைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969.6.27 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர் காணி அபிவிருத்தித் திணைக்களம், கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969.5.21
CT/2/371

5-1158—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### பதவிய உப பிரிவு

பதவியா நீர்ப்பாசன உப பிரிவிலுள்ள ட்ராக்ட் E ல் 2 "டுவின் லேபர் கொற்றேச்" கட்டுவதற்கு அனுராதபுரத்திலுள்ள வடமத்திய மாகாண பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 24.6.69 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்; அதன்பின்பு உடன் திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத்திணைக்களத்தில் ரூபா 35,000 தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகம், பதவியா, அனுராதபுரம், மகாகனந்தராவை ஆகிய இடங்களில் அலுவலக நேரங்களில் 15.6.69 தொடக்கம் 20.6.69, நண்பகல் 12 மணி வரைக்கும் கொடுக்கப்படும். கேள்வியினராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில்

மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களேயும் ஓர் பத்திரத்தில் வெளிப் படுத்தி இக்கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50.00 கேள்விக்கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக் கட்டணங்கள் ஓர் கச்சேரியில் செலுத்திப்பற்றுச் சீட்டுக் காட்டினுலும் போதுமானது.

4. இக்கேள்விக்காகிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் பதவியாவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
பதவியா நீர்ப்பாசனத் திட்டம்.

நீர்ப்பாசன அலுவலகம்,
பதவியா, 19.5.69.

5–1026—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அனுராதபுர உபபிரிவு

அனுராதபுர உபபிரிவின் கீழ் உள்ள கீழ்க்காணும் வேலைக்குக் கேள்விப் பத்திரங்கள் வடமத்திய பிரிவு பெரும் நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 24 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்பின் உடனடியாகத்திறக்கப் படும்.

| வேலையின் விபரம் | பதிவுத் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கட்டுபத்வேவ குளத்துக்கு திருத்த வேலைகள்.. | 50,000.. | 100 |

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் மேற்கூறிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள், அனுராதபுரம், மகாகனத ராவ, ராசாங்கான ஆகிய நீர்ப்பாசன கந்தோர்களில் அலுவலக நேரங் களில் ஆனி மாதம் 21 ம் திகதி நண்பகல் 12 மணிவரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன் வருவோர் தங்கள் பதிவுப்புத்த கங்களுடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை களின் விபரங்களையும், அவற்றின் பெறுமதியையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற் றுப்பத்திரங்களை வழங்குமுன் கேள்விக் கட்டணமாக மேற் கூறிய தொகையை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நீர்ப்பாசனக் கந்தோரில் அல்லது ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. மேலதிக விபரங்களை அனுராதபுர நீர்ப்பாசன உபபிரிவுக் கந்தோ ரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

டபிள்யு. எஸ். சபாரத்தினம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அனுராதபுர உபபிரிவு.

அனுராதபுரம்,
1969 ம் ஆண்டு மே மீ 18 ந உ.

5–1000—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கொழும்பு உப பிரிவு

கீழே சொல்லப்பட்ட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 5, ஜாவத்த வீதியிலுள்ள மேற்பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியிய லாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ந் தேதி செவ் வாய்க் கிழமை முற்பகல் 11 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வேலைக்கும் நேராக உள்ள தொகைக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் களும், கூட்டுறவுச் சங்கங்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைகளுக்குக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவ ராவர்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பதிவுத்தொகை | கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| (1) மற்றிவலபொக்கே என்னும் இடத்தில் 6 புகுமுகம் கொண்ட அசையும் கதவுக் கட்டடத்திற்குச் சீர்திருத்தம் செய்தல்.. | 46,000 .. | 50 |
| (2) தண்டுகம் ஓய அணைக்கட்டின் வலக்கரை வாய்க்கால் அமைப்பு .. | 32,000 .. | 50 |
| (3) வத்தளை பிரிக்கும் அணைக் கட்டிற்கு அடிப்பாகத்திற்குப் பெருங்கற்கள் பரவி அதன் மேல் கப்பிக்கல் பரவித் தார் பூசுதல் .. .. | 30,000 .. | 50 |
| (4) ஹெற்றிகே ஓய அணைக்கட்டின் மீதி வேலை .. .. | 17,000 .. | 25 |

3. இக்கேள்விகளுக்காகிய வெற்றுப் பத்திரங்களை கொழும்பு, களுத் துறை, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியிய லாளர்களின் காரியாலயங்களில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 21 ந் தேதி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விக்காரர் களாக முன்வருவோரைக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகுதி யுடையவர்களா அல்லவா என்று ஆராய்ந்தறியும் பொருட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குத் தங்கள் பதிவுப் புத்தகத்துடன், தாங்கள் தற் போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவை களின் பெறுமதிகளையும் ஓர் பத்திரமூலம் கேள்விக்காரர்களாக முன் வருவோர் வெற்றுப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும்.

வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 21 ந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலக நேரத்தில் மேற்கூறிய கேள்விக் கட்டணத்தை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்திற் கட்ட வேண்டும் அல்லது ஒரு கச்சேரியில் கட்டிய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்படி வேலைகளைப்பற்றிய படங்களையும் வேறு தேவையான விபரங்களையும் அலுவலக நேரங்களில் கொழும்பு உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கொழும்பு உப பிரிவு,

நீர்ப்பாசனக் காரியாலயம்,
ஜாவத்த வீதி,
கொழும்பு–5,

5–1050—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## நீர்ப்பாசன இலாகா

### செங்கலடி உபபிரிவு

மட்டக்களப்பிலுள்ள கீழைப்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் செங்கலடி உப பிரிவிலுள்ள கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள், நீர்ப்பாசன இலாகாவில் கீழ்க்காணும் தொகைக்குக் குறையாமல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1969 ம் ஆண்டு யூன் மாதம் 24 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு காலை 10.05 மணிக்கு பரிசீலனை செய்யப்படும்.

| கேள்வியின் விபரம் | ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருக்கவேண்டிய தொகை | கேள்விக் கட்டணத் தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| செங்கலடியில் ஓர் சிரேஸ்ட உத்தியோகத்தர் இல்லம் அமைத்தல் .. | 40,000 .. | 50 |

2. வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு "யூன்" மாதம் 20 ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரையும் செங்கலடி/கல்முனை/அம்பாறை நீர்ப்பாசனக் காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். மரியசிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
செங்கலடி உப பிரிவு.

நீர்ப்பாசனப் அலுவலகம்,
செங்கலடி, 17.5.1969

5-1046—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## இலங்கை அரச விமானப் படை

1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதிவரை கீழ்க்காணும் பொருட்களை விநியோகம்/சேவை செய்வதற்கு மெழுகிட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இக் கேள்விகள் இதன் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகளில் முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு பாசன் வீதியிலுள்ள விமானப்படைத் தலைமை நிலையத்திலிருக்கும் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| (1) விநியோகம் /சேவை | (2) கேள்வி முடிவடையும் திகதி | (3) கேள்விப் படிவங்கள் கொடுக்கப்படும் இறுதி நாள் |
|---|---|---|
| (1) கட்டுநாயக்கா, சீனன்வாடி, டியத்தலாவை ஆகிய இடங்களிலுள்ள இலங்கை விமானப் படையினர்க்கு கட்டிடவேலைப் பொருட்கள் விநியோகித்தல் .. .. | 20.6.69 .. | 19.6.69 |
| (2) சீனன்வாடி, டியத்தலாவையிலுள்ள இலங்கை விமானப் படையினரின் உத்தியோக உடைகள், பாசறைத் துணிகள் சலவை செய்தல் | 20.6.69 .. | 19.6.69 |

2. திருப்பிக் கொடுக்கப்படும் கேள்விக் கட்டுப்பணம் ரூபா 75 ஐ தனித் தனி ஒவ்வொரு விநியோகம்/சேவைக்கு கொழும்பு பாசன் வீதியிலுள்ள விமானப் படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன அதிகாரியும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டியபின்னரே கேள்விப் படிவங்கள் கொடுக்கப்படும். மேற்கூறப்பட்ட விநியோக/சேவைக்கான கேள்விப்படிவங்கள் மேலே 3 ம் நிரையில் குறிக்கப்பட்ட திகதிகளில் நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

3. மேலதிக விபரங்களை கொழும்பு பாசன் வீதியிலுள்ள விமானப் படைத் தலைமை நிலையத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

ஈ. ஆர். அமரசேகரா,
ஏயர் உவைஸ் மார்ஷல்,
விமானப் படைத் தலைவர்.

5-1018—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர் பகுதி, திருகோணமலை

திருகோணமலை கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரால் கீழ்க் காணும் சிறிய நீர்ப்பாசன வேலைகட்குக் கேள்விப்பத்திரங்கள் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரர்களிடமிருந்து 19.6.1969 பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அவை மறுநாட் காலை 9.30 மணிக்குத் திறக்கப்படும்.

| குளத்தின் பெயர் | வேலை விபரம் | பயிர்ச்செய்கைக் குழுவின் பகுதி |
|---|---|---|
| **குச்சவெளி காரியாதிகாரியின் பகுதி** | | |
| 1. ஒட்டுப்புல்லுக்குளம் | திருத்தம் .. | சமளன்குளம் |
| 2. குஞ்சுக்குளம் .. | திருத்தம் .. | புதுவெளிக்குளம் |
| 3. ஒட்டன்குளம் .. | வாய்க்கால் திருத்தம் | வன்னியார்வெளி |
| 4. பொய்கைக்குளம் .. | துருசு கட்டுதல் .. | குசவனுத்துவெளி |
| 5. குசவனுத்து அணைக் கட்டு | திருத்தம் .. | குசவனுத்துவெளி |
| 6. ஆனைவிளுந்தான் குளம் | திருத்தம் .. | தென்னமரவாடி |
| 7. களிக்காட்டுகுளம் .. | துருசு திருத்தம் .. | ஆண்டான்குளம் |
| 8. சமளன்குளம் .. | மதவுகட்டுதல் .. | சமளன்குளம் |
| **மூதூர் காரியாதிகாரியின் பகுதி** | | |
| 9. கறடிபாளிக்குளம் .. | திருத்தம் .. | சம்பூர் |
| 10. வேப்பன்குளம் .. | துருசு கட்டுதல் .. | கட்டபறிச்சான் |
| **கன்னியா காரியாதிகாரியின் பகுதி** | | |
| 11. மகமார்குளம் .. | திருத்தம் .. | மகமார் |

இக் கேள்விக்கான வெற்றுப்பத்திரங்களை இவ் அலுவலகத்தில் 17.6.69 பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பத்திரம் பெறுவதற்குக் கேள்விக் கட்டணமாக ரூபா 10 ஒரு கச்சேரியில் கட்டியதற்கான பற்றுச்சீட்டுக் காண்பிக்கப்படல் வேண்டும். இக்கேள்விகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. சண்முகராசா,
கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர், திருகோணமலை.

திருகோணமலை,
1969 ம் ஆண்டு மே மீ 19 ந உ.

5-1124/1—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர் பகுதி, திருகோணமலை

திருகோணமலை கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரால் கீழ்க் காணும் சிறிய நீர்ப்பாசன வேலைகட்குக் கேள்விப் பத்திரங்கள் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கொந்துருத்துக்காரர்களிடமிருந்து 19.6.1969 பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அவை மறுநாட் காலை 9.30 மணியளவில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. பட்டியனுத்துக்குளம் .. | திருத்தம் .. | கிண்ணியா |
| 2. மண்ணெடுத்தகுளம் .. | திருத்தம் .. | கிண்ணியா |
| 3. எற்றபெண்டிவெவ மகாவெவ .. | திருத்தம் .. | கோமரங்கடவெல |

இக்கேள்விக்கான வெற்றுப்பத்திரங்களை இவ் அலுவலகத்தில் 17.6.69 பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பத்திரம் பெறுவதற்குக் கேள்விக் கட்டணமாக ரூபா 50.00 ஒரு கச்சேரியில் கட்டியதற்கான பற்றுச்சீட்டுக் காண்பிக்கப்படல் வேண்டும். இக்கேள்விகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. சண்முகராசா,
கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர், திருகோணமலை.

திருகோணமலை,
1969 ம் ஆண்டு மே மீ 19 ந உ.

5-1124/2—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

## ஹம்பாந்தோட்டை மாவட்டத்தேயுள்ள வரண்ட கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுதல்

ஹம்பாந்தோட்டை அரசாங்க அதிபரினால் அனுமதிக்கப்பட்ட, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தேயுள்ள கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகத்திற்கான கேள்விப்பத்திரங்கள் லொறிச் சொந்தக்காரர்களிடமிருந்து 1969 ம் வருடம் ஜூன் மாதம் 25 ந் திகதி பி. ப. 3.00 மணிவரை ஹம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபரினால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் குறிக்கப்பட்ட நேரம் முடிந்தவுடனேயே கோருதல்காரர்களின் முன் நிலையில் திறக்கப்படும்.

2. ஹம்பாந்தோட்டைக் கச்சேரியிலோ அல்லது வேறெந்தக் கச்சேரியிலோ ரூபா 10/- முற்பணமாகக் கட்டப்பட்டுப் பெற்ற அத்தாட்சிப் பத்திரமுள்ள லொறிச் சொந்தக்காரர்களுக்குக் கோருதல் பத்திரங்கள் வழங்கப்படும். 1969 ம் வருடம் ஜூன் மாதம் 12 ந் திகதி பிற்பகல் 3 மணிவரை கோருதல் பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கோருதல் பத்திரங்கள் இரு பிரதிகளில் சீலிட்ட தபாலுறைக்குள் வைக்கப்பட்டு உறையின் இடதுபக்க மூலையில் "குடிதண்ணீர் விநியோக கேள்விப்பத்திரங்கள்" என்று குறிப்பிட்டு கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திர பெட்டியிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்புதல் வேண்டும். ஓடப்படும் ஒவ்வொரு கட்டைத் தூரத்துக்கும் விலை விபரம் குறிக்கப்படல் வேண்டும். இவை இலக்கத்திலும் எழுத்திலும் சுத்தமாகக் குறிக்கப்படல் வேண்டும்.

4. வெற்றிகரமான கோருதல்காரர் ஒவ்வொரு தடவைக்கும் ஆகக் குறைந்தது 800 கலன் தண்ணீர் எடுத்துச் செல்லக் கோரப்படுவர். தண்ணீர் விநியோகம் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 6.00 மணிவரை செய்யப்படுதல் வேண்டும். அரசாங்க அதிபரினது உத்தரவுப்படி தண்ணீர் விநியோகக் கொந்துறாத்தை நடத்துவதற்காக வெற்றிகரமான கோருதல்காரர் ரூபா 500/- கட்டுப்பணமாகச் செலுத்தக் கோரப்படுவர். அரசாங்க அதிபரது உத்தரவுக்கமைய சேவையை செவ்வனே செய்யத்தவறிய வெற்றிகரமான கோருதல்காரர் இந்தக் கட்டுப் பணத்தொகையை இழக்க நேரிடும்.

5. அரசாங்க அதிபரது உத்தரவுக்கமையத் தேவையான பொழுது தண்ணீர் விநியோகம் செய்ய வெற்றிகரமான கோருதல்காரர், கோரப்படுவர். தினசரி விநியோகம் நடத்தப்படுமென்ற உறுதியோ அல்லது தினசரி வேலை கிடைக்குமென்ற உறுதியோ அளிக்கப்படமாட்டாது. தண்ணீர் விநியோகம் தேவைப்படும் நாட்கள் கொந்தறாத்துக்காரருக்கு அறிவிக்கப்படும்.

6. வெற்றிகரமான கோருதல்காரர் துப்பரவான "கல்வனைஸ்ட்" ராங்கிகளிலோ அல்லது "பௌசர்களிலோ" தண்ணீர் விநியோகத்தைச் செய்தல் வேண்டும். அரசாங்க அதிபர் இவைகளைத் தருவதற்கு ஒப்புதல் அளிக்கமாட்டார். சாதாரணமாக அம்பலாந்தோட்டை, நளகம, கதிர்காமம், தண்ணீர் தேக்கத்திலிருந்தே தண்ணீர் விநியோகத்தைப் பெறல் வேண்டும். எப்பொழுதாகுதல் அவசியம் என்று கருதப்பட்டால் வேறு எங்கிருந்தாவது தண்ணீர் விநியோகத்தைப் பெறுவதற்கு அரசாங்க அதிபர் அனுமதி கிடைக்கப்பெறும்.

7. தண்ணீர் விநியோகம் ஒருவருக்கு ½ கலனைகவும் ஆகக் கூடுதலாக ஒரு குடும்பத்திற்கு 5 கலனுமாகும். நேரத்திற்கு நேரம் அரசாங்க அதிபரின் கட்டளைப்படியோ அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு முறையோ தண்ணீர் விநியோகம் நடத்துவது அவசியமாகும்.

8. வெற்றிகரமான கேள்வியாளர் தேவையானதும் சரியானதுமான தண்ணீர் விநியோக சேவையை நடத்துவதென்ற உறுதிக்கான ஒப்பந்தம் செய்வதற்கு உடன்படுத்தப்படுவர். கொந்தறாத்துக்காரர் திருப்திகரமான முறையில் சேவையைச் செய்யத் தவறினாலோ அல்லது அரசாங்க அதிபருக்கு எழுத்து மூலமாகச் சேவையைச் செய்ய இயலாமை தெரிவிக்கும் பட்சத்திலோ அவருடைய கட்டுப்பணம் அரசாங்கத்திற்கு அறவிடப்படுவதோடு, அரசாங்க அதிபர், தன்னாலே தேர்த்தெடுக்கப்படும் எந்தவொரு கோருதல்காரருக்கும் சேவையைக் கையளிக்கும் உரிமையை உடையவராவர்.

9. எந்தவொரு காரணமும் காட்டாது எந்த ஒரு கேள்விப் பத்திரத்தையோ, எல்லாக் கேள்விப் பத்திரங்களையுமோ அல்லது கேள்விப் பத்திரத்தின் எந்தவொரு பகுதியையுமோ தள்ளுபடியாக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளவராவார்.

ஆர். பீ. அலவத்தேகம,
ஹம்பந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
ஹம்பந்தோட்டை.
**1969 ம் ௵ மே மாதம் 17 ம் திகதி.**

5-1009—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கச்சேரி, மொனருகலை

### ஜீப் வாகனம் ஒன்று விற்பதற்கும் அகற்றுவதற்குமான கேள்விப்பத்திரம்

மொனருகலை மாவட்டத்தில், இல: 1 சிறி 9350 வில்லிஸ் ஜீப் வாகனம் ஒன்று விற்பதற்கும் அகற்றுவதற்குமான கேள்விப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 26 ந் திகதி முற்பகல் 11.30 மணிவரை மொனருகலை அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மொனருகலை அரசாங்க அதிபரிடமிருந்து பெறப்படும் வெற்றுப் பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்ட பத்திரங்களில் அனுப்பப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மொனருகலை கச்சேரியிலோ அல்லது வேறு எக்கச்சேரியிலோ ரூபா 50/- செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டை, மொனருகலை அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து, கேள்விக்கான வெற்றுப் பத்திரங்களை 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 24 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விகள் ஏற்றுக்கொண்டதாக அனுப்பப்படும் கடிதம் கிடைத்து ஐந்து நாட்களுக்குள் வாகனத்திற்குரிய முழுத் தொகையையும் செலுத்தத்தவறியவர்களின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் கொடுபடமாட்டாது.

4. அனுமதிக்கப்பட்ட கேள்விக்காரர் வாகனத்திற்குரிய முழுத்தொகையையும் செலுத்திய அன்றே வாகனத்தை அகற்றுவதற்கான ஆயத்தங்களைச் செய்ய வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது சிலவற்றையோ எந்தவிதமான காரணமுமில்லாமல் நிராகரிப்பதற்குரிய அதிகாரம் மொனருகலை அரசாங்க அதிபருக்குண்டு.

6. கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறை சீல் வைக்கப்பட்டு "ஜீப் வாகனம் ஒன்று விற்பதற்கும் அகற்றுவதற்குமான கேள்விகள்" என்று உறையின் இடது மேல் மூலையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது மொனரு

கலே கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடல் வேண்டும்.

7. காரியாலய நேரங்களில் வாகனத்தை மொனருகலே கச்சேரியில் பார்வையிடலாம்.

8. கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 27 ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு மொனருகலே கச்சேரியில் திறக்கப்படும்பொழுது, கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

9. மேலதிக விபரங்களை மொனருகலே அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ஜி. புஞ்சிகேவா,
அரசாங்க அதிபர்,
மொனருகலே மாவட்டம்.

கச்சேரி,
மொனருகலே,
18, வைகாசி 1969.

5-941—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

மஸ்கெலியாவில் மின்சக்தி நெசவு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள், தலைவர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7 அவர்களால் 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 21 ம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. பின்வரும் அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக்கென ரூபா 100,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

1. பொது மராமத்து இலாகா
2. நீர்ப்பாசன இலாகா
3. புகையிரத இலாகா
4. கல்வி இலாகா
5. பிரதான பொதுச் சௌக்கிய பொறியியலாளர் இலாகா.

3. கேள்விப் பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர், ரூபா 100 ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 20 ம் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

பி. ஏச். பி. த சில்வா,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல : டிஎ/டி/190,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு வைகாசி 17.

5-944—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா

கிரிந்திவெலயில் நெசவு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள், தலைவர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா, கொழும்பு 7 அவர்களால் 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 21 ம் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பின்வரும் அரசாங்க இலாகாக்கள் ஏதாவதொன்றிலாவது கட்டிட வேலைக்கென ரூபா 25,000/– அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் :—

1. பொதுமராமத்து இலாகா.
2. நீர்ப்பாசன இலாகா
3. புகையிரத இலாகா
4. கல்வி இலாகா
5. பிரதான பொதுச் சௌக்கிய பொறியியலாளர் இலாகா.

3. கேள்விப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 100/—ஐ வைப்புப்பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்தக் கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து, 1969 ஆண்டு ஆனி மாதம் 20 ம் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பி. ஏச். பி. த சில்வா,
தலைவர்,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல : டிஎ/டி/191,
கொழும்பு 7,
1969 ம் ஹு வைகாசி மீ 19 ந வ.

5-1017—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## இலங்கை அரச கடற்படை

1.10.69 தொடங்கி 30.9.70 வரைக்கும் இலங்கை அரச கடற்படைக்குச் சொந்தமான கலங்கள் கொழும்புத்துறைமுகத்தில் தங்கி நிற்கும் சமயங்களில், அவற்றிலுள்ள அழுக்குக் களைந்து சுத்தப்படுத்துவதற்கான வேலைக்கு கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றன.

2. கேள்வி நிபந்தனைகளுட்பட மற்றைய விபரங்கள் யாவும் கீழொப்பமிட்டிருப்பவரிடம் பெறலாம்.

3. கேள்வி நிபந்தனைகளுக்கமைய கேள்வி மனு சமர்ப்பிக்கத் தகுதியுள்ளவர்க்கே கேள்விப் பத்திரங்கள் கொடுபடும்.

4. கேள்விப் பத்திரங்கள் 23.6.69 பி. ப. 3 மணி வரைக்கும் கொடுபடும்.

5. 24.6.69 மு. ப. 10.30 மணிக்குப் பிந்தாமல் கடற்படைத் தளபதிக்குக் கேள்வி மனுக்கள் கிடைக்க வேண்டும்.

6. ஒவ்வொரு கேள்வி மனுவுக்கும் வைப்புப் பணமாக ரூபா 75/- அவசியம். கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு முன் இலங்கை அரச கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில் இவ் வைப்புப்பணம் கட்டப்பட வேண்டும் வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப் பணமெல்லாம் திருப்பித் தரப்படும்.

இ. கதிர்காமர்,
" றியர் அட்மிரல்",
கடற்படைத் தளபதி.

தலைமைக்காரியாலயம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. எண் : 593,
கொழும்பு, 1969, மே மாதம் 18 ஆம் திகதி.

5-946—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

## இலங்கை அரச கடற்படை

### 1969–70 நிதி வருடத்துக்கு துணிமணிகள் சலவை செய்வதற்குரிய கேள்விப் படிவங்கள்

1969.10.1 ஆம் தேதி தொடங்கி 1970.9.30 ஆம் தேதி வரைக்கும் இலங்கை அரச கடற்படைக்கு துணிமணிகள் சலவை செய்வதற்கு கொழும்பில் பின்வரும் சேவைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் நேரெதிரே குறிப்பிட்டிருக்கும் முடிவு தேதியன்று முற்பகல் 10.30 மணி மட்டும் கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| 1<br>சேவை | 2<br>கே. வி. முடிவு தேதி | 3<br>கே. வி. பவடிவங்கள் பெறக்கூடிய இறுதிக் தேதி |
|---|---|---|
| (அ) கொழும்பிலும் வெலிசறையிலும் துணிமணிகள் சலவை செய்வதற்கு | 26.6.69 .. | 25.6.69 |
| (ஆ) திருகோணமலையில் துணிமணிகள் சலவை செய்வதற்கு .. | 26.6.69 .. | 25.6.69 |
| (இ) காரைநகரில் துணிமணிகள் சலவை செய்வதற்கு .. | 26.6.69 .. | 25.6.69 |

2. மேற்குறிப்பிட்ட சேவைகளுக்குரிய கேள்வி விண்ணப்பப் படிவங்கள் கொடிமர வீதி, கொழும்பு 1 ல் உள்ள இலங்கை அரச கடற்படைத் பிரதம பதவி உத்தியோகத்தர் (ஆதாரம், நடைமுறைகள்) என்பவரால் மேலே குறிப்பிட்ருக்கும் 3 ம் நிரலிற் சொல்லப்பட்ட தேதியன்று நண்பகல் 12 மணி மட்டும் கொடுபடும். படிவங்களுக்கு விண்ணப்பதாரர் தத்தமது நிதிநிலைபரங்களைப் பற்றிய விபரங்களுடன் எழுத்துமூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. திரும்பப் பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணம் ரூபா 75 வீதம் தனித்தனி ஒவ்வொரு சேவைக்குரிய கேள்விக்கும் பணம் கட்டிய பின்னரே படிவங்கள் வழங்கப்படும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. பணம் காசுக் கட்டளைகள் மூலம் அனுப்புவதாயின் காசுக் கட்டளை கடற்படைத் **தளபதியின்** பெயரிலிருக்க வேண்டும்.

4. கேள்விப் படிவங்களுக்கு விண்ணப்பிப்போர் தமது முழுப்பெயரையும் முகவரியையும் கொடுக்க வேண்டும். தேவைப்படுமாயின், ஒப்பந்த வேலையை நிறைவேற்றுதற்குரிய தகுதியை நிரூபிப்பதற்குப் போதிய அத்தாட்சி காட்டவேண்டும்.

5. கேள்விப் படிவம் கேட்போர் தாங்கள் எந்த இடத்து எந்தச் சேவைக்கு கேள்விப்ப படிவம் கேட்கிறார்களென்பதைக் குறிப்பிடுவது முக்கியம்.

இ. கதிர்காமர்,
"றியர் அட்மிரல்"
கடற்படைத் தளபதி.

தலைமைக் காரியாலயம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு,
1969 ம் ஆடு மே மீ 18 ந உ.

5–945—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

## சுகாதாரத் திணைக்களம்—குருணாகல் பிரிவு

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்—1969/70

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், குருணாகல் ஏற்றுக்கொள்வார்.

2. (க) **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிய பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்கள் எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம் :—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருணாகல். கேள்விகள் மூடப்படும் தினதித்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணிக்குப்பின் கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிரூபணத்தையே அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், குருணாகல் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புவரின் பெயரும், முகவரியும், எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காலரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நான்காவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாக திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதுகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள் எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப் படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை "சீ" யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப் படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. கேள்விகள் மூடப்படும் திகதியிலிருந்து ஆறு மாத கால எல்லைவரைக்கும் கேள்விக்காரர்கள் தங்கள் கேள்விவீதங்களை ஏற்றுக்கொள்ளவதற்கு இடமளிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை மீள்வதற்கு இடமளிக்கப்படமாட்டார்கள்.

10. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

11. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டியபின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

12. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

13. நோயாளர்களாகவும் வேலைக்காரர்களாகவும் ஒப்படைக்கப்பட்ட பங்கீடுச்சிட்டைகளுக்கு உணவிலாக்காவிலிருந்து இனமாகவோ அல்லது 19.12.66 ல் இருந்து நடைபெறும் விலைக்கோ அரிசி பெற்றுக்கொள்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர்கள் தாபனப் பொறுப்பதிகாரால் உத்தரவுச் சீட்டுகள் வழங்கப்படுவார்கள்.

14. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப் படிவங்களில் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்பத்திரவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

மா. காரளசிங்கம்,
குருணாகல் சுகாதார சேவை அத்தியட்சகருக்காக.

குருணாகல்,
1969 ம் ஆண்டு மே மீ 15 ந உ.

**குறித்த அட்டவணை**

| (1) தாபனங்கள் | (2) கேள்விக் கட்டுப் பணம் | (3) பிணை வைப்புப் பணம் | (4) கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | (5) உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்களுக்கு — மீன் | மா. இ. | கருவாடு | காய்கறி | நோயாளிகளுக்கு — மீன் | மா. இ. | கருவாடு | காய்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாஹோ, வைத்தியசாலை | 100 | 1,100 | | 300 | 300 | 300 | 1,300 | 3,200 | 3,200 | 3,200 | 1,2500 |
| மாவத்தகம, வைத்தியசாலை | 100 | 1,100 | | 400 | 400 | 400 | 1,300 | 3,100 | 2,800 | 2,800 | 11,200 |
| பொல்கஹவெல, வைத்தியசாலை | 100 | 800 | | 600 | 600 | 600 | 2,400 | 1,700 | 1,300 | 1,200 | 5,000 |
| பொல்பித்திகம, வைத்தியசாலை | 100 | 1,100 | | 300 | 300 | 300 | 1,200 | 2,000 | 1,800 | 1,900 | 7,500 |
| அலவ்வ, கி.வை.: பி. வி. | 100 | 600 | | 100 | 100 | 100 | 300 | 1,500 | 1,500 | 1,500 | 6,200 |
| பின்கிரிய, கி. வை. : பி.வி. | 100 | 400 | | 200 | 200 | 200 | 700 | 400 | 400 | 400 | 1,700 |
| கொக்கறல்ல, கி.வை. : பி.வி. | 100 | 800 | | 400 | 400 | 400 | 1,500 | 1,500 | 1,500 | 1,600 | 6,100 |
| ஹெற்றிப்பொல, கி. வை. : பி.வி. | 100 | 600 | | 600 | 500 | 500 | 2,200 | 1,400 | 1,300 | 1,300 | 5,000 |
| ஹிரிப்பிற்றிய, கி. வை. : பி.வி. | 100 | 600 | 1969.6.25 ல் | 100 | 100 | 100 | 300 | 900 | 900 | 900 | 3,700 |
| கன்தானகெதற, கி.வை. : பி.வி. | 100 | 800 | முற்பகல் | 400 | 400 | 400 | 1,600 | 500 | 500 | 500 | 2,100 |
| கட்டுப்பொத்த, கி. வை. : பி.வி. | 100 | 800 | 10 மணி | 300 | 300 | 300 | 1,200 | 1,500 | 1,500 | 1,400 | 5,700 |
| மூவன்ஹெல, கி. வை. : பி. வி. | 100 | 600 | | 300 | 300 | 300 | 1,100 | 700 | 800 | 700 | 3,000 |
| நாறம்மல, கி. வை. : பி. வி. | 100 | 600 | | 300 | 300 | 300 | 1,000 | 700 | 700 | 800 | 3,000 |
| தலம்பிற்றிய, கி. வை. : பி.வி. | 100 | 600 | | 100 | 100 | 100 | 400 | 900 | 600 | 900 | 4,000 |
| பஹலகிரிவாவ, கி.வை.: பி.வி. | 100 | 600 | | 300 | — | 500 | 1,000 | 2,200 | — | 3,600 | 7,800 |
| துனுக்கதெனிய, பி. வி. | 100 | 300 | | 200 | 200 | 200 | 600 | 100 | 100 | 100 | 500 |
| மாஹாமூக்கலன்யாய, பி. வி. | 100 | 300 | | 200 | 200 | 200 | 900 | 300 | 400 | 300 | 1,300 |
| கொஸ்ஹேன, பி.வி. | 100 | 300 | | 100 | 100 | 100 | 400 | 100 | 100 | 100 | 300 |

5-1034—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## வித்தியாபகுதி

மேற்காணும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு யூன் மாதம் 24 ம் திகதி செவ்வாய்க்கிழமை 10.30 மணிவரை யாழ்ப்பாண வடபொரும்பாக கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளபடும்.

| பாடசாலைப் பெயர்கள் | வேலை விபரங்கள் |
|---|---|
| (1) யா/கொழும்புத்துறைஆசிரிய கலாசாலை | கட்டட திருத்த வேலை |
| (2) யா/கோப்பாய் ஆசிரிய காலசாலை | கட்டட திருத்த வேலை |
| (3) யா/நல்லூர் ஆசிரிய காலசாலை | கட்டட திருத்த வேலை |
| (4) யா/பலாலி ஆசிரிய கலாசாலை | கட்டட திருத்த வேலை |
| (5) யா/ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை | பாடசாலைக் கட்டட வேலை |
| (6) யா/ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை | கூரை திருத்த வேலை |

மாவட்ட குறுக்கம்
யா=யாழ்ப்பாண மாவட்டம்

**குறிப்பு :** பதிவுத்தகைமை.

மேற்கூறிய 1 ம் வேலைக்கு ரூபா 9,500 மும் அதற்கு மேலும்,
மேற்கூறிய 2 ம் வேலைக்கு ரூபா 12,500 மும் அதற்கு மேலும்.
மேற்கூறிய 3 ம் வேலைக்கு ரூபா 5,000 மும் அதற்கு மேலும்
மேற்கூறிய 4 ம் வேலைக்கு ரூபா 14,500 மும் அதற்கு மேலும்.
மேற்கூறிய 5 ம் வேலைக்கு ரூபா 14,000 மும் அதற்கு மேலும்.
மேற்கூறிய 6 ம் வேலைக்கு ரூபா 11,000 மும் அதற்கு மேலும்

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கபட்ட தொகைகளுக்கு கல்வி கலாச்சார அமைச்சில் பொது வேலைப்பகுதியில் அல்லது நீர்ப்பாசன திணைக்களத்தில் பதியப்பட்டவர்களுக்கு 1969 ம் ஆண்டு யூன் மாதம் 23 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை வடபெரும்பாக கல்வியதிபதி அவர்களால் வழங்கப்படும். (நீர்ப்பசன திணைக்களத்தில் ரூபா 15,000 க்கும் அதற்கு குறைந்து தொகைக்கும் பதியப்பட்டவர்கள் மேற்படி வேலைகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் அல்லர்). இவ்வேலைகளுக்கு ரூபா 100 கொழும்பு கலாச்சார அமைச்சு அலுவலகத்திலோ அல்லது வடபெரும்பக கல்வித் திணைக்களத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எக்கச்சேரியிலோ கட்டியதாக பற்றுச் சீட்டு வடபெரும்பாக வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமட்டா. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி கலாச்சார அலுவலகள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் அலுவலகத்துப் பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது வடபெருமபாக கல்வியதிபதியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பில் காண்பிக்கப்பட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரம் வழங்கப்படும்.

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில், பொதுவேலைப் பகுதியில் அல்லது கல்வி அமைச்சில் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இடுபணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்டதாக அவை அத்தாச்சி காண்பித்து கேள்விப்பத்திர படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. 2 ம், 3 ம் பந்தியில் குறிப்பிட்டபடி வடபெரும்பாக வித்தியதிபதியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அக்கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப்படம் பிறவிபரங்களும் அறியலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த தபால்மூலம் தலைவர், கேள்விச்சபை, வட பெரும்பாக கல்வித்திணைக்களம், 153, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு அனுப்பப்படவேண்டும். உள்ளூர் விண்ணப்பகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் தபாலில் அனுப்ப விரும்பாவிடின் விண்ணப்பகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தமது கேள்விப்பத்திரங்களை அடையாள முத்திரையிட்டு யாழ்ப்பாண கல்வித்திணைக்கள நிர்வாக உதவியாளரிடம் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலுறையில் விண்ணப்பகாரரின் பெயர் விலாசம் முதலியன குறிப்பிடப்பட வேண்டும்.

5. 1969 ம் ஆண்டு யூன் மாதம் 24 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண, 153 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வடபெரும்பாக கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். விண்ணப்பக்காரர்கள் இவ்வேளையில் அங்கு பிரசன்னமாய் இருக்கலாம். அவர்களுக்கு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்களை பெறும் திகதி முடிவடைந்தபின் ஆறு வாரங்களுக்கு தமது கேள்வியை அமுலில் வைக்க வேண்டுமென்று கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. யாழ்ப்பாண வடபெரும்பாக கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் இனையில் பரிசிலனைக்கென கேள்விப்பத்திரங்கள் இடைக்கக் கூடியதா இருக்கும்.

8. இக் கேள்விப்பத்திரங்களுக்கு 30.9.1966 க்கு முன் கல்வித் திணைக்களத்தால் பதியப்பட்ட ஒப்பந்தகாரப் பதிவுகள் கல்வி கலாச்சார அமைச்சினால் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

சி. தணிகாசலம்,
கல்வியதிபதி,
வட பெரும்பாகம், யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
1969 ம் ஆண்டு மே மீ 20 ந உ.

5–1032—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், கீழ் குறிக்கப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை ஒவ்வொரு பொருளுக்கும் எதிரே குறிக்கப்பட்டுள்ள முடிவுத் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.

| பொருள் | முடிவுத் திகதி |
|---|---|
| 1. கயிற்றுத் தும்பு (மெத்தைத் தும்பு) .. | 19.6.1969 |
| 2. சடைச்சணற் சாக்கு ('யூட் கெசின்') 45" தொடக்கம் 54" வரை அகலம், 1 ஆம் இலக்கம், நெருக்கமாக இழைக்கப்பட்ட 14 அவுன்சு .. .. .. | 20.6.1969 |

கேள்விகள் முடிவடைவதற்குக் குறித்த திகதிகளுக்கு முந்திய திகதி நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பொருளுக்குமாக ரூபா 100 ஐ கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டி அவ்விதம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

மேலதிக விபரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

வினியோகப் பகுதி, த. கா.,
200, கிருல வீதி,
கொழும்பு 5,
13, மே 1969.

5–1065—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## மொனருகலை கச்சேரி

### "எஸ்சல" திருவிழா 1969—கதிர்காமம்

1969 "எஸ்சல" திருவிழாவை முன்னிட்டு, கதிர்காமத்தில் செய்துமுடிக்க வேண்டிய கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் மொனருகலை அரசாங்க அதிபரால் 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 10 ந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) 38 ஏக்கர் பற்றைக்காடுகளை வெளியாக்குதல்.
(2) மேற்குப்பகுதியில் தற்காலிக விடுதிகள் அமைத்தல்.
(3) கிழக்குப் பகுதியில் தற்காலிக விடுதிகள் கட்டுதல்.
(4) 920 தற்காலிக கக்கூசுகள் கட்டுதல்.

2. கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 4 ந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை பதிவுசெய்யப்பட்ட அரசாங்க கொந்தராத்துக்காரர்களுக்கு வினியோகிக்கப்படும். ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விக் கட்டணமாக ரூபா 25/எக்கச்சேரியிலேனும் செலுத்திப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தலின் பின்னரே கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

3. மொனருகலை அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய வெற்றுப் பத்திரத்தின் இணைப்பிரதியில் கேள்விப்பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும்.

4. 1969 ம் ஆண்டு ஆனி மாதம் 10 ந் திகதி பிற்பகல் 2.05 மணிக்கு இக்கச்சேரியில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

5. ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கவரின் இடது பக்க மூலையில் வேலையின் பெயர் எழுதப்பட்டு சீல் வைக்கப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இக்கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடல் வேண்டும்.

6. தகுதியான கேள்விக்காரர் உடனடியாக வேலையைத் தொடங்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

7. மேலும் தேவையான விபரங்களைக் கந்தோர் நேரங்களில் இக் கச்சேரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ஜி. புஞ்சிஹேவா,
அரசாங்க அதிபர்,
மொனருகலை மாவட்டம்.

கச்சேரி, மொனருகலை,
1969, வைகாசி 20.

5–1051—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## *பொருட்கள் ஏல விற்பனை*

### *பொலிஸ் இலாகா*

*1969 ம் வருடம் ஆனி மாதம் 12 ம் திகதி காலை 9 மணிக்கு மிரிகான பொலிஸ் வளவில் இருக்கும் நுகேகொடைப் பகுதி பிரதான பொதி அறை அருகே நடைபெற விருக்கும் பகிரங்க ஏல விற்பனையில் பளம் பொருட்கள் விற்கப்பட விருக்கின்றது. பொருட்கள் அனைத்தும் விற்பனைக்கு முதல் நாளில் மேற் கூறப்பட்ட இடத்தில் மேற்பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. ஏலத்தில் பொருட்கள் வாங்குபவர்கள் உடனடியாக பணம் கட்டி பொருட்கள் கொண்டு செல்லுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர்.*

*பொலிஸ் அதிகாரி,*
*மேல் மத்திய மாகாணம்.*

*பொலிஸ் காரியாலயம்,*
*நுகேகொட, 20-5-69.*

*5–942—30. 5. 69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856*

## உபயோகிக்க முடியாத பொருள்கள் விற்பனை

பின்வரும் உபயோகிக்க முடியாத பொருட்கள் 1969 யூன் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2.00 மணிக்கு கொழும்பு 1, பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

(1) பழைய புதினப் பத்திரிகைகள்—ஏறத்தாழ 200 இருத்தல்.

(2) பழைய வர்த்தமானிகள் (கசெற்)

(3) பழைய புத்தகங்களும் பிரசுரங்களும்.

(4) பழைய கன்சாட் பத்திரிகைகள்.

(5) பழைய கார் ரயர்களும் (பன்னிரண்டு), ரியூப்களும் (நான்கு) (750×14)

(6) வெற்றுப் போத்தல்கள்.

ஏலதாரர் கொள்விலையைக் கொடுத்துப் பொருளையோ பொருட்களையோ உடனேயே எடுத்துச் செல்லும்படி வேண்டப்படுவர்.

யூ. சி. த. சில்வா,
பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சின்
நிரந்தரச் செயலாளருக்காக.

பாதுகாப்பு, வெளிநாட்டு விவ்கார அமைச்சு,
செனேற் கட்டிடம், கொழும்பு 1, 1969. 5. 22.

5-1143—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கடற்றொழில் திணைக்களம்

**யந்திரம் உள்ளனவும்/யந்திரம் இல்லாதனவும் பயனுறுத்தப்பட்ட/பயனுறுத்தப்படாத சீர்கெட்ட மீன்பிடி வள்ளங்களின் ஏல விற்பனை**

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும், இடங்களிலும் யந்திரம் உள்ளனவும்/யந்திரம் இல்லாதனவும் பயனுறுத்தப்பட்ட/பயனுறுத்தப்படாத சீர்கெட்ட மீன்பிடி வள்ளங்கள், காலை 9.30 மணிககு பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிப்பிடப்பட்ட இடங்களில் வள்ளங்களைப் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாக, பின்வரும் முறைப்படி செலுத்தப்பட வேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக, வள்ளம் விற்கப்பட்ட விலையில் ¼ ;

(ஆ) வள்ளம் விற்கப்பட்ட விலையின் மீதி ¾, மூன்று நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

4. ஏலத்தில் விற்ற வள்ளம், உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தப்படும்வரை, அவ்விடத்தில் அதன் பாதுகாப்பு, விற்பனையில் வாங்கியவனுலேயே சாரும்.

**நிரல்**

| வள்ள எண் | யந்திர இனம் | இடம் | ஏலத்தின் தேதி |
|---|---|---|---|
| டீசி 27 | — | சிலாவத்துறை | 1.7.69 |
| ரீஎஸ் 24 | $12\frac{3}{4}$ ப.வ. லிஸ்ரர் (புளக் மாத்திரம்) | மன்னார் | 2.7.69 |
| ரீஎஸ் 61 | — | தெற்கு பார், மன்னார் | 2.7.69 |
| டீடீ 12 | 30 ப. வ. பேர்க்கின்ஸ் | பள்ளிமுனை | 2.7.69 |
| ஜேபீஎவ் 14 | — | வங்காலை | 3.7.69 |
| ஜேபீ 84 | — | வங்காலை | 4.7.69 |
| ரீஎஸ் 21 | — | நபுராட்டுக்குடா கடற்கரை | 4.7.69 |
| எஸ் 100 | — | எஸ்ஐசீ வள்ளச்சாலை, கொக்கலை | 5.7.69 |
| ரீ 243 | லிஸ்ரர் 3 சிலிண்டர் | மிரிஸ்ஸ கடற்கரை | 1.7.69 |
| எஸ் 14 | யன்மார் 8 ப. வ. | ஷை | 2.7.69 |
| எஸ் 108 | யன்மார் | ஷை | 2.7.69 |
| எஸ்ஐசீ 92 | — | ஷை | 2.7.69 |
| எஸ் 63 | — | ஷை | 2.7.69 |
| எஸ் 93 | 10 ப. வ. குபோட்டா | ஷை | 2.7.69 |
| எம்சீ 52 | யன்மார் | ஷை | 2.7.69 |
| எம்சீ 2 | — | மகாத்தோட்ட கராஜ், மாத்தறை | 3.7.69 |
| ரீ 29 | பார்சன்ஸ் | தெவுந்தரைக் கடற்கரை | 4.7.69 |
| ரீ. 36 | பார்சன்ஸ் 11 ப. வ. | கவிஸாவெல்ல | 4.7.69 |
| ரீ 300 | — | கோட்டெகொடை ஓறுவெல்ல | 5.7.69 |
| எஸ் 142 | — | தங்காலை கடற்கரை | 7.7.69 |
| எஸ் 68 | — | தங்காலை கடற்கரை | 7.7.69 |
| எஸ்ஐசீ 113 ரோட்பிடோ | — | அம்பாந்தோட்டைக் கடற்கரை | 8.7.69 |
| ரீ 346 | — | லூக்கஸ் வள்ளச்சாலை, பாணந்துறை | 9.7.69 |
| ரீ 175 | 8 ப. வ. யன்மார் | கட்டுக்குறுந்தை கூட்டுறவு வ.ச. வள்ளச்சாலை, களுத்துறை வடக்கு | 10.7.69 |
| கேபீபீ 1 | — | ஷை | 10.7.69 |
| எஸ் 2 | லிஸ்ரர் | ஷை | 10.7.69 |
| வீஜே 6 | — | ஷை | 10.7.69 |
| ஜேபீஎவ் 38 | 20 ப. வ. கெல்வின் | நவலங்கா வள்ளச்சாலை, வேருவலை | 11.7.59 |
| எஸ் 189 | — | ஷை | 11.7.69 |
| எம்சீ 58 | — | ஷை | 11.7.69 |
| ஜேபீ 43 | — | ஷை | 11.7.69 |
| ஓஎஸ் 7 | — | ஷை | 11.7.69 |
| எம்சீ 4 | — | வேருவலைக் கடற்கரை | 11.7.69 |
| எஸ் 172 | — | வேருவலைக் கடற்கரை | 11.7.69 |
| ஜீஎபீ 3 | — | பலப்பிட்டிய கடற்றொழில் அலுவலகத்துக்குக் கிட்ட | 12.7.69 |
| ஜேபீ 10 | — | ஷை | 12.7.69 |
| எஸ் 162 | — | பலப்பிட்டிய பாலத்துக்குக் கிட்ட | 12.7.69 |
| எம்சீ 15 | — | பலப்பிட்டிய கடற்கரை | 12.7.69 |

| வள்ள எண் | யந்திர எண் | இடம் | ஏலத்தின் தேதி |
|---|---|---|---|
| ரீ 403 | — | ஹிக்கடுவை கடற்கரை | 14.7.69 |
| எஸ் 107 | — | ஹிக்கடுவை கடற்கரை | 14.7.69 |
| எஸ் 3 | — | ஜே. பீ. எப் வள்ளச்சாலை, நீர்கொழும்பு | 15.7.69 |
| எஸ் 20 | — | ஜே.பீ. எப். வள்ளச்சாலை, நீர்கொழும்பு | 15.7.69 |
| வீஜே 1 | — | வீஜே வள்ளச்சாலை, நீர்கொழும்பு | 16.7.69 |
| ரீ 14 | — | நீர்கொழும்புக் கடற்கரை | 17.7.69 |
| எஸ் 38 | டியூற்ஸ் | நீர்கொழும்புக் கடற்கரை | 17.7.69 |
| எஸ். 28 | — | டபிள்யூ. எவ். வள்ளச்சாலை, | 18.7.69 |
| ரீ 122 | பார்சன்ஸ் | அளுத்கூறுவை, நீர்கொழும்பு | 19.7.69 |
| டீசி 28 | 20 ப. வ. லிஸ்ரர் | டிவலப்மன்ட் கொ. வள்ளச்சாலை, காங்கேசன்துறை | 7.7.69 |
| எம்சீ 30 | — | வேலணை | 8.7.69 |
| எஸ்ஜசீ 59 | ரோர்பிடோ | தாளையடி | 11.7.69 |
| எஸ்ஜசீ 127 | — | முல்லைத்தீவுக் கடற்கரை | 12.7.69 |
| ஜேபீ 74 | புக் | முல்லைத்தீவுக் கடற்கரை | 12.7.69 |
| எஸ் 117 | — | செல்வம் வள்ளச்சாலை, முல்லைத்தீவு | 12.7.69 |
| ஆர்எஸ் 3 | — | பவர்கிருப்ட் வள்ளச்சாலை, யாழ்ப்பாணம் | 9.7.69 |
| எஸ்ஜசீ 84 | 24 ரோர்பிடோ ப. வ. | பவர்கிருப்ட் வள்ளச்சாலை, யாழ்ப்பாணம் | 9.7.69 |
| எம்சீ 83 | — | பவர்கிருப்ட் வள்ளச்சாலை, யாழ்ப்பாணம் | 9.7.69 |
| ரீஎஸ் 48 | 22 ப. வ. லிஸ்ரர் | பேத்தாலை, வாளைச்சேனை | 14.7.69 |
| எம்ஜேடீ 15 | — | மட்டக்களப்பு பார் | 15.7.69 |
| வீஜே 2 | — | மட்டக்களப்பு பார் | 15.7.69 |
| டபிள்யூ 5 | — | உப்போடை | 16.7.69 |
| ரீ 7 | — | பொத்துவில் கடற்கரை | 18.7.69 |
| ரீ 410 | — | ஆர். வீ. டீ. பீ. வள்ளச்சாலை, அம்பாறை | 19.7.69 |
| ரீ 233 | — | ஷை ஷை | 19.7.69 |
| எஸ் 150 | 18 ப. வ. டையா | ஷை ஷை | 19.7.69 |
| எஸ் 92 | 8 ப. வ. யன்மார் | ஷை ஷை | 19.7.69 |
| ரீஎஸ் 47 | — | சிலோன் ஷிப்பியாட்ஸ் சீனக்குடா, திருகோணமலை | 22.7.69 |
| ஜேபீ 30 | 11 ப. வ. யன்மார் | இன்னர் துறைமுகத் தெரு, திருகோணமலை | 23.7.69 |
| எஸ்ஜசீ 43 | — | இன்னர் துறைமுகத் தெரு, திருகோணமலை | 23.7.69 |
| ரீ 347 | — | உப்புவெளி | 24.7.69 |
| ஜேபீ. 27 | — | உப்புவெளி | 24,7.69 |
| எஸ்ஜசீ 96 | — | 10 ம் குறிச்சி | 25.7.69 |
| எஸ்ஜசீ 22 | அலிஸா கிரெக் | இலங்கை வேத்தியக் கடற்படை வளவு | 26.7.69 |
| எம்சீ 82 | — | கடற்றொழில் அலுவலகம், திருகோணமலை | 27.7.69 |
| எஸ் 106 | 10 ப. வ. கெல்வின் | கலருவு | 29.7.69 |

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு
1969 ம் ஆண்டு மே மீ 19 ந் வ.

5–908—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

---

## கடற்றொழில் திணைக்களம்

### பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் யந்திரங்களின் ஏல விற்பனை

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும், இடங்களிலும், பயனுறுத்தப்பட்ட கடலக டீசல் யந்திரங்கள் காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிப்பிடப்பட்ட இடங்களில் யந்திரங்களைப் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாக, பின்வரும் முறைப்படி செலுத்தப்பட வேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக யந்திரம் விற்கப்பட்ட விலையில் ¼.

(ஆ) யந்திரம் விற்கப்பட்ட விலையில் மீதி ¾ மூன்று நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

4. ஏலத்தில் விற்ற யந்திரம், உரிய பணம் செலுத்தி அப்புறப்படுத்தப்படும்வரை அவ்விடத்தில் அதன் பாதுகாப்பு, விற்பனையில் வாங்கிய வருலேயே சாரும்.

நிரல்

| வள்ள எண் | யந்திர இனம் | இடம் | ஏலத்தின் தேதி |
|---|---|---|---|
| ரீ 62 | 8 ப. வ. யன்மார் | கடற்றொழில் திணைக்களம் தோட்டவெளி | 7.7.69 |
| எஸ் 379 | 24 ப. வ. ரோர்பிடோ | ஷை ஷை | 7,7 69 |
| ரீஎஸ் 24 | 12¾ ப. வ. லிஸ்ரர் | ஷை ஷை | 7.7.69 |
| ரீஎஸ் 61 | கலன்றி விக்ரர் | ஷை ஷை | 7.7.69 |
| ஜேபீ 84 | றஸ்ஸியன் | ஷை ஷை | 7.7.69 |
| ரீஎஸ் 57 | கவன்றி விக்ரர் | ஷை ஷை | 7.7.69 |
| கேஎஸ்எல் 9 | பார்சன்ஸ் | ஷை ஷை | 7.7.69 |
| ஜேபீ 13 | 8 ப. வ. யன்மார் | ஷை ஷை பேசாலை | 8.7.69 |
| ரீஎஸ் 21 | 12¾ ப. வ. லிஸ்ரர் | ஷை ஷை பேசாலை | 8.7.69 |
| ரீ 80 | புக் | ஷை ஷை கட்டுனேரியா | 22.7.69 |

| வள்ள எண் | யந்திர இனம் | இடம் | ஏலத்தின் திகதி |
|---|---|---|---|
| எவ் 21 | புக் | கடற்றொழில் திணைக்களம், கட்டுனேரியா | 22.7.69 |
| எவ் 22 | புக் | பெரும்பகுதிக் கடற்றொழில் அலுவலகம், நீர்கொழும்பு | 23.7.69 |
| — | லிஸ்ரர் எச்எல் 3 | ஜே. பீ. எவ். வள்ளச்சாலை, நீர்கொழும்பு | 15.7.69 |
| ஜேபீ 26 | குபோட்டா | கடற்றொழில் அலுவலகம், பாணந்துறை | 16.7.69 |
| ரீ 450 | புக் | கடற்றொழில் அலுவலகம், வேருவளை | 17.7.69 |
| எல் 7 | லிஸ்ரர் எச்.எவ். | கடற்றொழில் அலுவலகம், வேருவளை | 17.7.69 |
| எஸ் 381 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், ஊர்காவற்றுறை | 4.7.69 |
| டிடீ 6 | 22 ப. வ. லிஸ்ரர் | கடற்றொழில் அலுவலகம், ஊர்காவற்றுறை | 4.7.69 |
| எஸ் 376 | ரோர்பிடோ | லேடன் கராஜ், ஊர்காவற்றுறை | 4.7.69 |
| எஸ் 382 | புக் 2 சிலிண்டர் | கடற்றொழில் அலுவலகம், தாளையடி | 11.7.69 |
| எஸ்ஜசீ 102 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், முல்லைத்தீவு | 12.7 69 |
| வீகேஎஸ் 31 | அலிஸா கிரேக் | கடற்றொழில் அலுவலகம், காங்கேசன்துறை | 16.7 69 |
| வீகேஎஸ் 30 | அலிஸா கிரேக் | கடற்றொழில் அலுவலகம், காங்கேசன்துறை | 16.7 69 |
| டபிள்யூ 22 | 16 ப வ. யன்மார் | கடற்றொழில் அலுவலகம், வாளைச்சேனை | 4.7.69 |
| ஜேபீஎவ் 53 | அலிஸா கிரேக் | கடற்றொழில் அலுவலகம், செங்கலடி | 5.7.69 |
| ரீ 48 | யன்மார் 8 ப. வ. | கடற்றொழில் அலுவலகம், மட்டக்களப்பு | 7.7.69 |
| எம்சீ 42 | 12¾ ப. வ. லிஸ்ரர் | கடற்றொழில் அலுவலகம், திருகோணமலை | 27.7.69 |
| எஸ்ஜசீ 43 | ரோர்பிடோ | ஷை ஷை | 27.7.69 |
| எஸ்ஜசீ 96 | ரோர்பிடோ | ஷை ஷை | 27.7 69 |
| ஜேபீ 27 | 8 ப. வ. யன்மார் | ஷை ஷை | 27.7.69 |
| ரீ 286 | யன்மார் | ஷை ஷை | 27.7.69 |
| எஸ் 81 | லிஸ்ரர் எச்ஏ 2 | ஷை ஷை | 27.7.69 |
| ரீஎஸ் 36 | பேர்க்கின்ஸ் | ஷை ஷை | 27.7.69 |

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3.
1969 ம் ஆண்டு மே மீ 19 ந உ.

5–911—30.5.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,856

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## கள்ளுத்தவறணை குத்தகை மறு விற்பனை

### மட்டக்களப்பு மாவட்டம்—1969/70

14,846 ம் இலக்கம் கொண்ட 21.3.69 ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்த 1969/70 ம் வருடக் கள்ளுக்குத்தகை விற்பனவு விதிகளின்படியும் தற்போது அமுலிலிருக்கும் மது பரிபாலன எல்லா அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருத்தமாக விதிகளின்படியும் கீழ்க்காணும் இடங்களில் கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்குறிப்பிட்ட திகதி, நேரம்வரை மட்டக்களப்பு அரசாங்க அதிபரால் ஏற்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்கும் முடிவு நேரத்திற்கு கேள்விக்காரர்கள் இக்கச்சேரியில் சமூகமளிக்க வேண்டும்.

2. தவறணை இல. 3 ஆரைப்பற்றைத் தவறணைக்கு 1,000 ரூபாவும் மற்றய தவறணைகளுக்கு 500/– ரூபாவும் கச்சேரியில் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை காட்டி, எல்லாக் கச்சேரிகளிலும் மதுவரி அதிகாரி கந்தோர், கொழும்பு, உதவி மதுவரி அதிகாரி கந்தோர், திருக்கோணமலை, மதுவரி மேற்பார்வையாளர் கந்தோர், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து பெறக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

3. 14,846 ம் இலக்கம் கொண்ட 21.3.69ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் 1969/70 வருடக் கள்ளுக் குத்தகை விற்பனவு விதி இல. 4 (3) (I) படி பெறுமதிச் சான்றிதழ் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடன் அணைக்கப்படவேண்டும்.

4. தற்போதிருக்கும் தவறணை நிலம் தொடர்ந்து வருங்காலத்திற்கும் இருக்குமென்பதற்கு உத்தரவாதமில்லை.

5. ஏனைய விபரங்கள் மட்டக்களப்புக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. கே. பீ. பல்லவத்த,
மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர்,
மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1969, மே 20.

### குறிக்கப்பட்டுள்ள இடங்கள்

| கள்ளுத்தவறணை இல. | பிரிவு | தவறணை இருக்கும் உள்ளூர் பகுதி | கேள்வி விண்ணப்பம் முடிவுறும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|
| 3. | மண்முனைப்பற்று வடக்கு : | ஆரைப்பற்றைக்கிராமத்தில் | மு.ப. 13,6.69—10.00 |
| 4. | மண்முனை தெற்கு எருவில் போரை தீவுப்பற்று | மாங்காட்டுக்கிராமத்தில் | 13.6.69 10.30 |
| 6. | மண்முனை தெற்கு எருவில் போரை தீவுப்பற்று | எருவில் கிராமத்தில். | 13.6.69 11.00 |

குறிப்பு.— மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 2ம் இலக்கத்தவறணையான கோட்டமுனை தவிர்ந்து எல்லாத் தவறணைகளும் தினமும் காலை 8.00 மணிக்குத் திறக்கப்பட்டு பி. ப. 7.00 மணிக்கு மூடப்படும். கோட்டமுனைத் தவறணை தினமும் காலை 8.00 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 7.30 மணிக்கு மூடப்படும்.

5–1022—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856.

# நாளுவித அறிவித்தல்கள்

## நூலாசிரியர்களுக்கும் நூல் வெளியீட்டாளர்களுக்குமான அறிவித்தல்

பாடசாலை மாணவர்க்காய உப பாட நூல் வெளியீட்டிற்கு ஊக்கமளிக்கு முகமாக அரசாங்கம் நூற் பிரதிகளை விலைக்குப் பெற்றுக் கொள்ள முயற்சி எடுத்துளது. இம்முயற்சியின் கீழ், உவந்தனவெனக் காணும் விஞ்ஞான சம்பந்தமான நூல்களைப் பிரசுரித்த தாபனத்திடமிருந்து 1,000 உக்குக் கூடாத பிரதிகளைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வாங்க எதிர்பார்க்கிறது.

ஆதலின், 1.6.68 உக்கும் 31.5.69 உக்குமிடையில் வெளியிட்ட விஞ்ஞான சம்பந்தமான நூல்களின் பிரதிகள் இரண்டை வெளியீட்டாளர்கள் 15.7.69 உக்கு முன்னதாக, நுணுகி ஆராய்தற் பொருட்டு கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடநூல் ஆலோசனைச் சபையின் சார்த்துரை கொண்ட நூல்களின் பிரதிகளே விலைக்கு வாங்கப்படும். அப்படித் தெரிந்த நூல்களுக்காய நூலுரிமைப்பணம் இத்திணைக்களத்தின் விதிப்பிற்கியைய நூலாசிரியருக்கு வழங்குவதற்கு, வெளியீட்டாளர் சம்மதிக்க வேண்டும். நூலாசிரியருக்கு நூலுரிமைப் பணம் வழங்கப்படுவது இத்திணைக்களத்தூடாகும்.

எஸ். வணிகதுங்க,
பதில் ஆணையாளர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
சிறிமதிபாய,
சர் ஏனஸ்ற் த சில்வா மாவத்தை, கொழும்பு 3.
1969 ம் ஆண்டு மே.மீ 9 ந உ.

5–947—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

## பதவிகள் - வெற்றிடம் — ( 589 ஆம் பக்க தொடர்ச்சி )

### உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுப் பகுதி

**(தமிழ்) மொழிபெயர்ப்பாளர் பதவி**

உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுப் பகுதியில் (தமிழ்) மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு ஆண், பெண் ஆகிய இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்கான சம்பள விகிதம் ஆண்டொன்றுக்கு ரூபா 1,620 ல் ஆரம்பித்து ரூபா 120 வருடாந்த உயர்ச்சியுடன் ஆண்டொன்றுக்கு ரூபா 3,780 வரை செல்லும்.

3. **நியமன நியதிகள்.**—(1) ஆண் பரீட்சார்த்தியொருவர் நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவதுடன் நியமனம் ஒரு இளைப்பாற்றுச் சம்பள அடிப்படையில் செய்யப்படும்.

(2) பெண் பரீட்சார்த்தியொருவர் ஆரம்பத்தில் ஒரு சகாய நிதி அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன் நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டு காலத்துக்குப் பரீட்சார்த்த நிலையிலிருப்பார். பத்தாண்டு கால சேவையைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் எச்சமயத்திலும் அவர் விரும்பும்பட்சத்தில இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்தில சேருவதற்கு அருகதையுடையவராவார். விருப்புரிமையின் பேரில் இத்திட்டத்தில சேர்ந்த பினனர் மாற்றமுடியாது. பரீட்சார்த்த காலத்தின்போது இந்த விருப்புரிமையைப் பிரயோகிக்கும்பட்சத்தில், அதன் பின்னர் அவர் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார். மூன்றாண்டுப் பரீட்சார்த்த காலத்தில சேவை செய்யாத அந்தப்பகுதி தகுதிகாண் நிலைக் காலததுக்குச் சமானமாகும்.

(3) அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக "புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்" எனக் கருதப்படுபவராகிய தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி, 1956 ன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிச் கொள்கையை விளைப்படுத்தற்குத் தற்போதுள்ள அல்லது எதிர்காலத்தில் அமுலுக்குக் கொண்டுவரக் கூடிய சட்டங்கள், விதிகள் எதற்கும் தாம் அமைந்து நடப்பேனென்ற நிபந்தனைக்கு உடன்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி அவர்தம் தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலத்தில் அரசகரும மொழி—சிங்களம்—யில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவார். தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த கால முடிவில் அவரது நியமனம் உறுதிப்படுத்தப்படுவது, திருப்திகரமான வேலை, நடத்தை, சிங்களத்தில் குறித்த தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தியடைதல் ஆகியவற்றைப் பொறுத்திருக்கும்.

4. **தகைமை.**—பரீட்சார்த்திகள்—

(1) நற்பண்புடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

(2) இலங்கையராய் இருத்தல் வேண்டும்.*

(3) பின்வரும் பிரதான தேவைகளில் **ஒன்றையாவது** கொண்டிருத்தல் வேண்டும் :—

(1) லண்டன் பல்கலைக்கழக கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (உயர்தரம்) தமிழில்

(2) இலங்கை கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (உயர்தரம்) தமிழில்

(3) தமிழை (விசேட தமிழல்ல) ஒரு பாடமாகக் கொண்ட உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திரம்

(4) தமிழை ஒரு பாடமாகக் கொண்ட லண்டன் பல்கலைக்கழக இன்ரர் மீடியற் கலைகள் தராதரப் பத்திரம்/இலங்கைப் பல்கலைக்கழக பொதுக் கலைத் தகைமை (முதலாவது) பரீட்சைத் தராதரப் பத்திரம்

(5) பொதுத் திறைசேரியால் தமிழில் நடாத்தப்பட்ட தேர்ச்சிப் பரீட்சையில் தமிழில் (உயர்தரம்) சித்தி. அத்துடன் பின்வரும் துணைத் தேவைகளில் ஒன்றுவது:—

(அ) ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தியுடன் 1957 ஜூலை மாதத்தில அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (ஆங்கில மொழி), அல்லது

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர)ப் பரீட்சையொன்றில் ஆங்கில மொழியில் (அ பாடத்திட்டம்) அல்லது ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தியொன்றுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் ; அல்லது

பரீட்சையொன்றில் ஆங்கிலத்தில் சமமான அல்லது உயர்ந்த சாதனையுடன் கூடிய சித்தி

(ஆ) ஆங்கில மொழியில் ("அ" பாடத்திட்டம்) அல்லது ஆங்கில இலக்கியத்தில் ஒரு விசேட சித்தி உட்பட இரண்டுக்கு மேற்படாத சந்தர்ப்பங்களில் ஆறு பாடங்களில் சித்தியெய்திய கல்விப் பொதுத் தராதரப்பத்திரம்.

**குறிப்பு.**—விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் பெறுபேறுகள் வெளியிடப்படாத மேற்கூறிய பரீட்சைகள் எதையும் எடுத்திருப்பவர்களிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

(4) 13.6.1969 ந் திகதியன்று 19 வயதுக்குக் குறையாதவராகவும் 25 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

* அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கும் நோக்கங்களுக்கு "இலங்கையர்" என்னும் பதம், பரம்பரையாகவோ பதிவு செய்யப்பட்டதனாலோ இலங்கைப் பிரஜையாகவுள்ள ஒருவர் என வரையறை செய்யப்பட்டிருக்கின்றது.

5. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் பின்வரும் சலுகையைப் பெறுவதற்குத் தகைமையுடையவராவர் :—

4 (4) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் போர்ப்படையில் முன்னாள் வீரர்கள் அதாவது கிரமமான படையில் சேவையாற்றிய பின்னர் ஒதுக்கப்படைக்கு மாற்றப்பட்ட போர்ப்படை உறுப்பினர்கள் அல்லது சேவையிலிருந்து அபகீர்த்தியுடன் விலக்கப்பட்டவர்கள், நீக்கப்பட்டவர்கள் அல்லது துர்நடத்தை காரணமாகச் சேவையிலிருந்து விலக வேண்டியேற்பட்டவர்கள் தவிர, போர்ப்படையிலிருந்து விலகியிருக்கும் உத்தியோகத்தர்களும் வீரர்களும் கிரமமான படையில் தாங்கள் சேவையாற்றிய காலத்தைத் தங்கள் வயதிலிருந்து கழிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

6. விண்ணப்பதாரர்கள் அவர்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) இணைத்து அனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்பத்தாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப்பத்திரம் அல்லது கல்விக்குறியீட்டுத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

(ஆ) கல்வித் தகைமைகளை எடுத்தியம்பும் தராதரப்பத்திரம்

(இ) அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ்கள்

தராதரப் பத்திரங்கள், நற்சான்றிதழ்கள் எதனுடைய பிரதிகளும் திருப்பியனுப்பப்பட மாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள அல்லது உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் தத்தமது பகுதிகளின் தலைவர்களினூடாக அல்லது உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள் அல்லது ஆணையாளர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அவர்கள் விண்ணப்பதாரர் மொழிபெயர்ப்பு வேலையில் ஈடுபட்டிருக்கிறார் என்பதையும் அதன் தன்மையையும் உறுதிப்படுத்துவதுடன் நியமனம் செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை விடுதலை செய்ய முடியுமா என்பதை குறிப்பிடவும் வேண்டும்.

8. கீழே தரப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பங்களைச் செய்வதுடன், 13.6.1969 ந் திகதிக்குப் பிந்தாமல், தலைவர், உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு, த. பெ. 530, கொழும்பு என்ற விலாசத்துக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

9. விண்ணப்பங்களை அல்லது அது தொடர்பான கடிதப் போக்குவரத்துகளை தலைவர், உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு என்று விலாசமிட்டு அனுப்ப வேண்டுமேயொழிய இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவரின் பெயருக்கு அனுப்பக் கூடாது.

10. அரசாங்க சேவையிலுள்ள அல்லது உள்ளூராட்சிச் சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விடயத்தில், அவர் தம் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பகுதிகளின் தலைவர்களுக்கு அல்லது உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்களுக்கு அல்லது ஆணையாளர்களுக்கு கிடைக்கப்பெற்று, சம்பந்தப்பட்ட பகுதித் தலைவர் அல்லது உள்ளூராட்சிச் சபைத் தலைவர் அல்லது ஆணையாளர் அவற்றை ஏற்றுக்கொண்டதைச் சிபார்சு செய்து, தாமதத்துக்கான ஏற்ற காரணங்களைக் குறிப்பிட்டாலன்றி குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் இப்பணிமனையில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

11. பரீட்சார்த்திகள் கொழும்பில் நடைபெறும் ஒரு பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டியேற்படலாம். இது தொடர்பான பிரயாண, பிற செலவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

12. இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப்பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

என். விஜயவர்த்தன,
தலைவர்,
உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு.

த. பெ. 530,
கொழும்பு 1, 9.5.1969.

5—861—30.5.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,856

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| சனவரி | .. | 3.1.69 வெள்ளி | .. | 24.12.68 செவ்வாய் பி. ப. 3.30 |
| | | 9.1.69 வியாழன் | .. | 3. 1.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | | 16.1.69 வியாழன் | .. | 9. 1.69 வியாழன் ந. ப. 12.00 |
| | | 24.1.69 வெள்ளி | .. | 16. 1.69 வியாழன் ந. ப. 12.00 |
| | | 31.1.69 வெள்ளி | .. | 24. 1.69 வெள்ளி ந. ப. 12.00 |
| பெப்புருவரி | .. | 7.2.69 வெள்ளி | .. | 31. 1.69 வெள்ளி ந. ப. 12.00 |
| | | 14.2.69 வெள்ளி | .. | 7. 2.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | | 21.2.69 வெள்ளி | .. | 14. 2.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | | 27.2.69 வியாழன் | .. | 20. 2.69 வியாழன் பி. ப. 3.30 |
| மாச்சு | .. | 7.3.69 வெள்ளி | .. | 27. 2.69 வியாழன் பி. ப. 3.30 |
| | | 14.3.69 வெள்ளி | .. | 7. 3.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | | 21.3.69 வெள்ளி | .. | 14. 3.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | | 28.3.69 வெள்ளி | .. | 21. 3.69 வெள்ளி பி. ப. 3.30 |
| ஏப்பிறல் | .. | 3.4.69 வியாழன் | .. | 27. 3.69 வியாழன் பி. ப. 3.30 |
| | | 11.4.69 வெள்ளி | | 31. 3.69 திங்கள் பி. ப. 3.30 |
| | | 18.4.69 வெள்ளி | .. | 8. 4.69 செவ்வாய் ந. ப. 12.00 |
| | | 25.4.69 வெள்ளி | .. | 18. 4.69 வெள்ளி பி. ப. 3.30 |
| | | 30.4.69 புதன் | .. | 23. 4.69 வியாழன் ந. ப. 12.00 |
| மே | .. | 9.5.69 வெள்ளி | | 30. 4.69 புதன் பி. ப 3.30 |
| | | 15.5.69 வியாழன் | .. | 9. 5.69 வெள்ளி பி. ப 3.30 |
| | | 22.5.69 வியாழன் | | 15. 5.69 வியாழன் ந. ப 12.00 |
| | | 30.5.69 வெள்ளி | | 22. 5.69 வியாழன் ந. ப 12.00 |
| யூன் | .. | 6.6.69 வெள்ளி | | 30. 5.69 வெள்ளி ந. ப. 12.00 |
| | | 13.6.69 வெள்ளி | | 6. 6.69 வெள்ளி ந. ப. 12.00 |
| | | 20.6.69 வெள்ளி | | 13. 6.69 வெள்ளி ந. ப. 12.00 |
| | | 27.6.69 வெள்ளி | | 20. 6.69 வெள்ளி பி ப 3.30 |

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.